வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 11.09.2021 சனிக்கிழமை | இதழ் : 280 | பக்கங்கள் : 16

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் செப்ரெம்பர் 21 காலை வரை நீடிப்பு!

- பொருளாதார மத்திய நிலையங்களை திறந்து வைக்க நடவடிக்கை
- பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து விசேட அவதானம்
- நாடு திறக்கப்பட்டதன் பின்னர் கடைப்பிடிக்க வேண்டியவை குறித்தும் பரிந்துரை

கொழும்பு, செப்ரெம்பர் 11

தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, செப்ரெம்பர் 21 அதிகாலை 4.00 மணி வரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற, மெய்நிகர் ஊடான கோவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, இந்தத் தீர் 15 மானம் எட்டப்பட்டது.

## நாட்டில் மேலும் 131 பேர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, செப். 11

நாட்டில் நேற்று முன் தினம் வியாழக் கிழமை 131 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர் என்று சுகாதார 15

## இரட்டை குழந்தைகளை பிரசவித்த இளம் தாய் கொரோனாவால் மரணம்!

### யாழ்ப்பாணத்தில் துயர சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 11

இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாயார் கோவிட்-19 நோயினால் பரிதாபமாக உயிரிழந்தார்.

இணுவிலைச் சேர்ந்த அஜந்தன் இனியா (வயது-25) என்ற பெண்ணே இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

குழந்தைகள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

“கடந்த 4ஆம் திகதி கர்ப்பவதிப் பெண்ணுக்கு 15

## யாழில் ஒரு வயது குழந்தை கொரோனாவால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 11

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒரு வயதான குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பெரிய புலம் பகுதியைச் சேர்ந்த 15

## இலங்கையில் சினோபார்ம் தொழிற்சாலை!

கொழும்பு, செப். 11

சீனாவின் சினோபார்ம் நிறுவனமானது இலங்கையிலும் அதன் தடுப்பூசி நிரப்பும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அவதானம் செலுத்தியுள்ளது.

சீனாவின் சினோபார்ம் நிறுவனத்தின் தலைவர் லியு ஜின்க்சன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹேன்ன ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற கலந்துரை 15

## நாங்கள் மிரட்டப்படுகிறோம்!

### அதிபர், ஆசிரியர் சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 11

தொழிற்சங்கங்கள் முன் வைத்த கோரிக்கைகளை தீர்க்கத் தவறிய அரசாங்கம் அதிபர்களையும் ஆசிரியர்களையும் மிரட்டத் தொடங்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் குற் 15

## திருமணத்தில் பங்கேற்ற 13 சிறார்கள் உட்பட 34 பேருக்கு காரைநகரில் கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், செப். 11

காரைநகரில் ஊரடங்கு வேளை பந்தல் அமைத்து நூற்றுக்கும் அதிகமானோர் பங்கு கொண்டிருந்த திருமண நிகழ்வில் பங்கேற்ற 13சிறார்கள் உட்பட 34 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற் 15

## புலிகளின் குற்றங்களை விசாரிக்குமாறு ஐ.நாவிடம் தமிழ் அரசு கோரவே இல்லை!

### இது வெறும் பொய் பிரசாரம் என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், செப். 11

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழ் அரசுக்கட்சி கடிதம் எழுதியுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என்றும் அது விசமனத்தனமான பொய்ப் 15



## ஐ. நா. கூட்ட தொடரில் ஜனாதிபதி பங்கேற்பு!

### இந்தியப் பிரதமரையும் சந்திக்கவாய்ப்பு

கொழும்பு, செப். 11

செப்ரெம்பர் 21ஆம் திகதியன்று நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை 15



## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் ஒரு கப்பல் நிறுவனத்தில் வேலை கேட்டு விண்ணப்பித்து இருந்தார்.

ஒரு நாள் நேர்காணலுக்கும் அழைப்பு வந்தது.

அவரிடம் நேர்முகத் தேர்வு நடத்தியவர் கேட்டார்,

"புயல் வருமானால் என்ன செய்வீர்?", என்று.

அதற்கு நண்பர் சொன்னார், "நங்கூரத்தை நாட்டுவேன்", என்று.

"முன்னைவிட பெரியதாய் இன்னொரு புயல் வருகிறது அப்போது நீர் என்ன செய்வீர்?"

"நான் இன்னொரு நங்கூரத்தை நாட்டுவேன்"

இப்படியே கேள்வி பதில் சென்று கொண்டிருக்கையில்,

"பத்தாவது புயல்!" என்றார் தேர்வு நடத்தியவர்.

"நான் இன்னொரு நங்கூரத்தை நாட்டுவேன்"

"ஆனால் இத்தனை நங்கூரத்தை நீர் எங்கிருந்து பெறுவீர் ?"

அதற்கு அவர் சொன்னார்,

"தாங்கள் எங்கிருந்து புயல்களை பெறுவீர்களோ அங்கிருந்துதான்" என்று.!

*2015*ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த சில நாட்களில் அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த இராஜதந்திரி ஒருவர் இரவு விருந்திற்கு சில பிரமுகர்களை அழைத்திருந்தார்.

வந்திருந்த விருந்தினர்களில் கூட்டமைப்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்த ஒரு தலைவரும் இருந்தார்.

நீண்ட காலத்திற்கு பின்னர் அவர் மீண்டும் பாராளுமன்றம் செல்லவிருந்தார்.

வந்திருந்த விருந்தினர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, "சரி அண்ணே... வெண்டிட்டியள் இனி என்ன செய்யலாம் எண்டு நினைக்கிறியள்?" என்று கேட்டனர்.

அவர் சிரித்துக்கொண்டே, தனக்கேயுரிய பாணியில் சொன்னார், "மற்றக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் என்ன செய்கினமோ அதையே நானும் செய்வன்" என்று. இப்போதும் அவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்.

ஜெனிவாவுக்கு கூட்டமைப்பு ஒரே குரலில் தனது கருத்தைக் கூறமுடியாது போனது குறித்து, அவரின் நண்பர் ஒருவர் தொடர்புகொண்டார். அந்த பாராளுமன்ற உறுப்பினருடன் பால்ய வயதிலிருந்து நண்பர் அவர்.

அவருக்கு இந்தத் தலைவர்கள் மீது கடும் கோபம் என்பது அவரின் பேச்சில் தெரிந்தது.

"எல்லாரும் தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டு, அரசியல் செய்கிறார்கள். ஒருவருக்கும் மக்கள் மீது எந்தக் கவலையும் இல்லை. எல்லாரையும் பதவிகளை விட்டு விலகுங்கள் என்று மக்கள் அழுத்தம் கொடுக்கவேண்டும்..." இப்படி தனது கோபத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார் அவர்.

நான் சொன்னேன். முதலில் உங்கள் நண்பரைக் கேளுங்களேன் என்று.

அதற்கு அவர் சொன்னார், கேட்டால் என்ன சொல்லுவார் என்று தெரிந்துகொண்டு ஏன் கேட்பான் என்றார்.

ஜெனிவாவிற்கு எல்லா தலைவர்களும் ஒன்று சேர்ந்து கடிதம் அனுப்பியிருந்தால் என்ன நடந்திருக்கும். அது ஒருநாள் செய்தியோடு முடிந்திருக்கும். இப்போது பாருங்கள், இந்த விவகாரம் அடுத்த ஜெனிவா கூட்டத்தொடர் நடக்கும் பெப்ரவரி வரை எங்களுக்கு அரசியல் செய்யப் போதுமானது.

இதுக்குப்பிறகு, அந்த கூட்டத் தொடர் குறித்து மக்கள் கவனம் செலுத்துவார்கள். அப்போதும் நாங்கள் அதனை கொஞ்சநாள் செய்தியாக்குவோம்...! இப்படியே அடுத்த தேர்தல் வரை செய்து கொண்டிருக்க வேண்டியதுதானே...

இப்படித்தான் அந்தத் தலைவர் பதிலளித்திருப்பார் என்பது நண்பருக்குத் தெரியாததல்ல.

பிறகு என்ன அடுத்த தேர்தலில் இது முக்கியமான ஒரு தேர்தல், நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து வாக்களித்தால்தான் சர்வதேசம் நம்மைப்பார்க்கும் என்று பிரசாரத்தை செய்ய வேண்டியதுதான்.!

**- ஊர்க்குருவி**

# அடுத்த வாரம் மத்திய வங்கியின் ஆளுநராகின்றார் அஜித் நிவாட்



கொழும்பு, செப். 11

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், எதிர் வரும் 16ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்கவுள்ளாரென அரச உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்று அஜித் நிவாட் கப்ராலுக்காகத் தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்பதாயின் கப்ரால் சில நிபந்தனைகளை விதித்திருந்தார்.

அதன்படி மத்திய வங்கியின் ஆளுநராக தாம் பொறுப்பேற்றால், அமைச்சருக்கு இருக்கின்ற அதிகாரங்கள், சிறப்புரிமைகளையும் அவர் கேட்டிருந்தார்.

இவற்றை வழங்குவதற்காகவே தற்போது விசேட வர்த்தமானி அறிவிப்பு தயாரிக்கப்படுவதாக அறியமுடிகிறது.

## யாழ். பல்கலை. மாணவருக்கான அறிவித்தல்!

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழாவில் வழங்கும், பேராசிரியர் அ. துரைராஜா, பேராசிரியர் க. குணரத்தினம் ஞாபகார்த்த தங்கப்பதக்கங்களுக்கு தகுதி பெற்ற - விண்ணப்பித்த மாணவர்கள் தமது விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் ஆய்வு, வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் கோரியுள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் கோரப்பட்டிருந்தன. எனினும், கடந்த மாதம் முதல் நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு சட்டம் காரணமாக தபால் மூலத் தொடர்பாடல்களில் மந்த நிலை ஏற்பட்டிருப்பதனால் தபால் மூலமாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிய மாணவர்கள் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான அலுவலக நேரத்தினுள் நேரடியாக அல்லது 021 222 6500 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், விண்ணப்பத்தின் பிரதியை அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை araca@univ.jfn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் பதிவாளர் மேலும் கூறினார். (ஐ)

## மகனை தேடிய தந்தை மரணம்!

வவுனியா, செப். 11

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி அலைந்த மற்றொரு தந்தையும் நேற்று உயிரிழந்தார்.

வவுனியா, மதியாமடு, புளியங்குளத்தை சேர்ந்த செபமாலை இராசதுரை என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

2009ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவடைந்தபோது - 2009. 05. 24 அன்று ஓமந்தை சோதனை சாவடியில் வைத்து இராணுவத்தினர் உயிரிழந்தவரின் மகனான இராசதுரை விஜி (வயது 22) என்பவரை கைது செய்தனர்.

இதன் பின்னர், அவர் குறித்த எந்தத் தகவலும் தெரியவரவில்லை. தனது மகனை தேடியும் - நீதி கோரியும் போராட்டங்கள் பலவற்றில் அவர் பங்கேற்று வந்திருந்தார். வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் 1,668 நாட்களை கடந்து நடத்தப்படும் போராட்டத்திலும் அவர் பங்கேற்று வந்திருந்தார். இந்த நிலையில், தனது மகன் குறித்து எந்தத் தகவலும் தெரியாமலே அவர் உயிரிழந்தார். (ஐ)

### கல்வி tv CHANNEL-1

**11.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**11.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
11.09.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# ஜெனிவாவில் நடைபெறப்போவது?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் வழமைபோல் குத்துவெட்டில் ஈடுபடுகின்றனர். இது ஒரு பயனற்ற நடவடிக்கை என்பதை ஈழநாடு ஏற்கனவே தெளிவாகப் பதிவுசெய்திருக்கின்றது. வருடத்திற்கு இரண்டு முறை ஜெனிவா கூட்டத்தொடரை முன்வைத்து, தமிழ்க் கட்சிகள் இவ்வாறு தங்களுக்குள் முட்டிமோதிக் கொள்வது வழக்கம். கடந்த மார்ச் மாதம், மூன்று கட்சிகளின் தலைவர்களின் கையெழுத்துடன் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தனர்.

அந்தக் கடிதத்திற்காக மேற்கொள்ளப்பட்ட விவாதங்களோ ஏராளம். பேரவையின் ஆணையாளருக்கு ஒரு கடிதத்தை அனுப்புவது என்பது ஒரு சாதாரண விடயம். ஆனால், அவ்வாறானதொரு சாதாரண விடயத்திற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் காண்பித்த தோற்றமோ - சண்டைக்கு செல்வதற்கான தாயார்படுத்தல் போன்று காணப்பட்டது. ஒருவாறு இறுதியில், மூன்று தலைவர்களின் கையெழுத்துக்களுடன் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலும் இரண்டு கடிதங்களை அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அவ்வாறானதொரு கடிதம் இறுதியில் அனுப்பப்படவில்லை. ஏனெனில், அதற்கிடையில் மீண்டும் தமிழ் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

குறித்த கடிதத்தில் பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தாலும் கூட, இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட புதிய பிரேரணையில் பல்வேறு விடயங்கள் உள்வாங்கப்படவில்லை. அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், மனித உரிமைகள் பேரவை என்பது 47 உறுப்பு நாடுகளைக் கொண்டிருக்கும் ஓர் ஐ. நா அமைப்பு. அந்த அமைப்பில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் உறுப்பு நாடுகளால் ஆராயப்பட்ட பின்னரே வாக்கெடுப்பிற்கு விடப்படும். வாக்கெடுப்பிற்கு விடப்படும்போது, உறுப்பு நாடுகளின் பெரும்பான்மையான ஆதரவு கிடைத்தால்தான் அந்தப் பிரேரணையை நிறைவேற்ற முடியும்.

எனவே, பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே, பல்வேறு சமரசங்கள் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே அது இறுதி சுற்றுக்கு விடப்படும். இந்த இடைப்பட்ட நாட்களில் பிரேரணையின் உள்ளடக்கத்தில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படும். இதுதான் அங்குள்ள நிலைமை. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா ரெப்லிஸ் அம்மையார், இந்த ஆண்டு ஆரம்பத்தில் 'டான்' தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், இதனை மிகவும் சிறப்பாகக் கூறியிருந்தார். அதாவது, குறிப்பிட்ட பிரேரணையில் பயன்படுத்தப்படும் மொழி பேரவையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இதன் பொருள் என்ன?

எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜெனிவா அமர்வில், பேரவையின் ஆணையாளர், அவரின் வாய்மொழிமூல அறிக்கையை சமர்பிக்கவுள்ளார். புதிய பிரேரணைக்கு பின்னரான காலப்பகுதியின்மீதே அவர் கவனம் செலுத்துவார். இந்த அரசாங்கம் பேரவையின் பிரேரணையை நிராகரித்திருக்கும் நிலையில், இலங்கையில் உள்ள கட்டமைப்பின்மீதான நம்பிக்கையை அவரால் வெளிப்படுத்த முடியாது. அதேவேளை, கொரோனாவால் இலங்கை பாதிக்கப்பட்டிருக்கும் சூழலையும் அவர் முற்றிலும் புறம்தள்ளமாட்டார்.

கடந்த மார்ச்சில் அவர் முன்வைத்த அறிக்கை கடுமையானதாக இருந்தது. இந்த நிலையில், ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை அதிகம் மென்மையானதாக இருப்பதற்கான வாய்ப்பும் இல்லை. அவ்வாறு அவரால் செய்யவும் முடியாது. இந்த நிலையில் அரசாங்கத்தின் சர்வதேச கடப்பாட்டை மேலும் வலியுறுத்துவதாகவும், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஆலோசனையாகவுமே அவரின் வாய்மொழி மூல அறிக்கை அமைந்திருக்கும். இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துடன் ஒத்துழைக்க மறுக்கின்ற நிலையில், பேரவையின் ஆணையாளரால் பேரவையின் நிலைப்பாட்டை மேலும், வலுப்படுத்திக் கொள்ளும் வகையில்தான் செயல்பட முடியும். ஆனால், இது ஒரு வாய்மொழிமூல அறிக்கையாக இருப்பதால் அதிகம் இதில் எதிர்பார்க்க முடியாது.

# காண்டா மிருகங்களை தலைகீழாக தொங்கவிட்ட ஆராய்ச்சிக்கு பரிசு!

*காண்டா மிருகங்களை தலைகீழாகத் தொங்கவிட்டு, அதன் மூலம் விலங்குகளுக்கு என்ன விளைவு ஏற்படும் என்று சோதிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக்கு இந்த ஆண்டின் மாறுபட்ட பரிசு ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.*

*இந்தப் பரிசின் பெயர் இக்நோபல் (*Ig Nobel*). இவை வேடிக்கையாக வழங்கப்படுபவை. உண்மையான நோபல் பரிசுகள் அல்ல. அந்த அளவுக்கு பிரபலமாகவும் இல்லை. கோவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக அமெரிக்காவில் வழக்கமாக நடக்கும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் இதற்கான விழாவை நடத்த முடியவில்லை. அதனால் அனைத்து வேடிக்கையான காட்சிகளும் இணையத்திலேயே நடந்து முடிந்தன.*

*"இக்நோபல் பரிசுகள் முதலில் உங்களை சிரிக்க வைக்க வேண்டும். பின்னர் சிந்திக்கத் தூண்ட வேண்டும்" என்கிறது இதை வழங்கும்* Annals of Improbable Research *அறிவியல் நகைச்சுவை இதழ்.*

*போக்குவரத்து இடமாற்றம் தொடர்பான பிரிவில் இந்த ஆராய்ச்சிக்கு இக்நோபல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 12 காண்டா மிருகங்களை தலைகீழாக 10 நிமிடங்களுக்கு தொங்கிவிட்டு இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.*

*கார்னெல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விலங்கு ஆராய்ச்சியாளர் ரொபின் ரேட் கிளிஃப், ஆபிரிக்க நாடான நமீபியாவில் இந்த ஆராய்ச்சியைச் செய்து பார்த்திருக்கிறார். ஹெலிகொப்டருக்கு அடியில் விலங்குகளைத் தலைகீழாகக் கட்டித் தொங்கிவிட்டால் அவற்றின் உடல்நிலை பாதிக்கப்படுமா என்று அறிவதற்காக இதைச் செய்தனர்.*

*ஆபிரிக்காவில் காண்டா மிருகங்களைப் பாதுகாப்பதற்காக அவற்றை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு மாற்றும் பொருட்டு அவற்றை ஹெலிகொப்டரில் தலைகீழாகத் தொங்கிவிட்டு எடுத்துச் செல்வது வழக்கம்.*

*இருப்பினும், விலங்குகளின் இதயம் மற்றும் நுரையீரல் செயல்பாடு தலைகீழாக பறக்கும்போது இயல்பாக இருக்கிறதா என்பதை சரிபார்க்க யாரும் அடிப்படை ஆய்வைச் செய்யவில்லை என்று ரொபின் கூறுகிறார்.*

*ஹெலிகொப்டர்கள் மூலம் காண்டா மிருகங்களை தலைகீழாகக் கொண்டு சென்ற முதல் நாடு நமீபியா அல்ல. ஆனால், அவர்கள் அதைப் பின்னோக்கிப் பார்த்தார்கள். "இதை ஆய்வு செய்து கண்டுபிடிப்போம், இது காண்டா மிருகங்களுக்கு உகந்ததா என்பதை உறுதி செய்ய வேண்டும்" என்று யோசித்தார்கள் " என்று பி.பி.சியிடம் தெரிவித்தார் ரொபின்.*

*இந்த அடிப்படையில் ரொபினும் அவரின் குழுவினரும் நமீபிய நாட்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சுடன் இணைந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். 12 காண்டா மிருகங்களை கிரேனிலில் தலைகீழாகத் தொங்கிவிட்டு விளைவுகளைப் பதிவு செய்தனர்.*

*விலங்குகள் அதைச் சமாளித்தன. உண்மையில், காண்டாமிருகங்கள் தலைகீழாகத் தொங்கவிடப்பட்ட நிலையில் ஒரு பக்கமாகப் படுக்க வைக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவதை விட சிறப்பாகவே இருந்தன. அதனால் தலைகீழாகத் தொங்கவிடப்படுவதே சிறந்தது என்ற முடிவுக்கு இந்தக் குழு வந்தது.*

*"அதன் காரணம், ஒரு காண்டாமிருகம் அதன் ஒரு பக்கமாக படுத்திருக்கும்போது, இரத்த ஓட்டமானது ஈர்ப்பு விசையால் பாதிக்கப்படுவதாக நான் நினைக்கிறேன். வேறுவிதமாகக் கூறுவது என்றால், நுரையீரலின் அடிப்பகுதி அதிக இரத்த ஓட்டத்தைப் பெறுகிறது. ஆனால், மேல்பகுதிக்கு இரத்தம் போதுமான அளவு செல்வதில்லை. அதனால் காண்டா மிருகம் நேராக நிற்பதைப் போன்று, தலைகீழாகத் தொங்கவிடப்படும்போதும் நுரையீரல் சமமான இரத்த ஓட்டத்தைப் பெறுகிறது" என்று விளக்கினார் ரொபின்.*

*இக்நோபல் பரிசுகள் உண்மையான நோபல் பரிசுகளைப் பெற்றவர்களால் வழங்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு விழாவில் பிரான்சிஸ் ஆர்னோல்ட் (2018 வேதியியல்), மார்ட்டி சால்ஃபி மற்றும் எரிக் மஸ்கின் (2017 பொருளாதாரம்) ஆகியோர் பங்கேற்றனர்.*

*வெற்றியாளர்களுக்கு சிம்பாப்வே நாட்டின் 10 ரில்லியன் போலியான நாணயத்தாள் வழங்கப்பட்டது.*


*"இக்நோபல் பற்றி நான் முதலில் கேள்விப்பட்டபோது, இது நல்லதா கெட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அது "உங்களை சிரிக்க வைக்கிறது, பிறகு சிந்திக்க வைக்கிறது" என்று நினைக்கிறேன். பூமியில் வாழும் இந்த அற்புதமான விலங்குகளை காப்பாற்ற என்னென்ன முயற்சிகள் நடக்கின்றன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்." என்று ரொபின் தெரிவித்தார்.*

*"இது உண்மையில் காண்டாமிருக இடமாற்றத்தையும், யானை இடமாற்றத்தையும் மாற்றியுள்ளது. இந்த, பெரிய விலங்குகளை தலைகீழாகத் தூக்கிச் செல்வது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எருமை, நீர்யானை மற்றும் ஒட்டகச்சிவிங்கி போன்ற பிற உயிரினங்களில் இந்த ஆராய்ச்சியை நாம் செய்ய வேண்டியிருக்கிறது " என ரொபின் குழுவைச் சேர்ந்த பீட் மோர்கெல் என்ற மருத்துவர் தெரிவித்தார்.*

*ரொபின் குழுவைத் தவிர பபிள்கத்தில் உள்ள பற்றீயாக்கள், திரையரங்கில் இருக்கும் காற்று, அரசியல்வாதிகளின் தொப்பை என பல்வேறு மாறுபட்ட ஆராய்ச்சிகளுக்கும் இக்நோபல் பரிசுகள் கிடைத்தன.*

*(பி.பி.சி. தமிழ்)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 11 சனிக்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 26
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : பஞ்சமி




11.09.2021

**மேடம்**
நல்ல செய்தி வருவதில் தாமதம் ஏற்படும். நிம்மதியான நாள். புதிய வாகனம், வீடு வாங்கும் யோகம் உண்டாகும். சற்று குழப்பத்துடனும், மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள்

**இடபம்**
அமைதியும் நிம்மதியும் நிறையும். தாயால் நன்மை வரும். பேச்சினால் பிரச்னையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். வாகனத்தைச் சீரமைப்பீர்கள். வேலை பளு அதிகமாகும்.

**மிதுனம்**
வருமானம் உயரும். உறவினர்களின் பொறாமை வெளிப்படும். மிதமான நலன்கள் உண்டு. யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். குழந்தைகளை மகிழ்வித்து மகிழ்வீர்கள். பயணம் செல்வீர்கள்.

**கடகம்**
குடும்பம் மகிழும். உயர்தோரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். செல்வம் சேருவதில் தாமதம் ஏற்படும். வீடு மாற வாய்ப்புள்ளது. உங்களது பேச்சினால் குடும்பத்தினருக்கு நன்மை ஏற்படும்.

**சிம்மம்**
கடந்தகால செய்கை ஒன்று பற்றிய மன உறுத்தல் நீங்கும். நீங்கள் தேடிக்கொண்டிருந்த நல்ல வாய்ப்பு தானாக வரும். இளைஞர்கள் பாராட்டுகளைப் பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**
உடல்நலம் சீராகும். தன்னம்பிக்கை கூடும். பழிகள் அகலும். பெரியோரின் செயல்கள் மூலம் நன்மை அடைவீர்கள். குடும்பத்தில் யாருக்கேனும் திருமணம் நிச்சயமாகும்.

**துலாம்**
தவறான நபர்கள் தானாக விலகிப் போவார்கள். புதிய விஷயம் ஒன்றைக் கற்று பலன் அடைந்து மகிழ்வீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைத்து நன்மை அடைவீர்கள்.

**விருட்சிகம்**
சருமம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் மருத்துவம் மூலம் அகலும். குடும்பத்தில் பலநாட்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த விஷ அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். அரசின் ஆதரவு உண்டு.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆதரவுப் பெருகும். சகோதர, சகோதரியுடன் ஒற்றுமை பிறக்கும். மனம் மகிழும். பாராட்டுப் பெறுவீர்கள். விலை உயர்ந்த பொருளை பரிசளிப்பீர்கள்.

**மகரம்**
மனதில் மகிழ்ச்சி தங்கும். தந்தைக்கு நன்மை உண்டாகும். மனதில் தன்னம்பிக்கை துளிர் விடுவதால் வெற்றி பெறுவீர்கள். உற்சாகம் கூடும். அலுவலக பணிகளில் கவனமாக இருங்கள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அமோகமான நாள். பணியில் தடைகள் வரலாம். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். வாழ்க்கைத்துணைக்கு அலுவலகத்தில் நன்மை வரும்.

**மீனம்**
பணியிடத்தில் நீங்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். எதிலுமே தடைகளும், தாமதங்களும் இருந்து பின் பிறரிடம் பேசும்போது அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம்.

# தமிழக புதிய ஆளுநராக ஆர்.என்.ரவி நியமனம்

சென்னை, செப். 11,

தமிழ்நாடு ஆளுநராகப் பணியாற்றி வந்த பன்வாரிலால் புரோகித் பஞ்சாப் ஆளுநராக மாற்றப்பட்டுள்ள நிலையில், அவருக்கு பதிலாக நாகாலாந்து ஆளுநராக இருக்கும் ரவீந்திர நாராயண் ரவி தமிழ்நாட்டு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பன்வாரிலால் புரோகித்துக்கு பஞ்சாப் ஆளுநர் பொறுப்பு கூடுதலாகக் கொடுக்கப்பட்ட நிலையில் சில நாட்களுக்கு முன் பன்வாரிலால் பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் குடியரசுத் தலைவர் வெளியிட்ட உத்தரவில் இந்த ஆளுநர் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பீகாரில் உள்ள பாட்னாவில் பிறந்த ரவீந்திர நாராயண் ரவி 1974 இல் இயற்பியலில் முதுகலைப் பட்டம் பெற்றார் மற்றும் பத்திரிகைத் துறையில் சிறிது காலம் பணியாற்றிய பிறகு 1976இல் ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றிபெற்று இந்திய காவல் பணியில் சேர்ந்தார். அவருக்கு கேரளா கேடர் ஒதுக்கப்பட்டது. பத்தாண்டுகளுக்கும் மேலாக கேரளாவில் மாவட்ட எஸ்.பி. உட்பட பல்வேறு பதவிகளில் கேரளாவில் பணியாற்றினார், பின்னர் சி.பி.ஐ-யில் பணியாற்றியபோது, சுரங்க மாபியாக்கள் உட்பட பல்வேறு



முறைகேடுகளைத் துப்பு துலக்கினார்.

நாட்டின் முதன்மை புலனாய்வு அமைப்பான இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் உளவுத் துறை பணியகத்தில் (IB) இருந்தபோது, அவர் ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு உள்ளிட்ட விவகாரங்களைக் கையாண்டார். மேலும் ரவி, தெற்காசியாவில் மனித குடியேற்றத்தின் இயக்கவியலில் நிபுணத்துவம் பெற்றார் மற்றும் எல்லை மக்களின் அரசியல் சமூகவியலில் விரிவாகப் பணியாற்றியுள்ளார். இந்த பின்னணியில் 2019 ஓகஸ்டில் நாகாலாந்து மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட ரவி, அங்கே இரு ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் தமிழ்நாடு ஆளுநராகத் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

# காவல்துறை பின்புலத்தை கொண்டவரை ஆளுநராக நியமனத்தில் உள்நோக்கம்

## சந்தேகம் எழுகிறது என்கிறார் கே.எஸ்.அழகிரி

சென்னை, செப். 11,

முழுக்க காவல்துறை பின்புலம் கொண்டவரை தமிழக ஆளுநராக நியமித்திருப்பதற்கு உள்நோக்கம் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது என, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக, கே.எஸ். அழகிரி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

“ஆர்.என்.ரவியை தமிழக ஆளுநராக மத்திய அரசு நியமித்துள்ளது. பாட்னாவைச் சேர்ந்த இவர், 1976 ஆம் ஆண்டு கேரள மாநில ஐ.பி.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்தார். அதன்பிறகு 2012 ஆம் ஆண்டு புலனாய்வு பணியகத்தின் சிறப்பு இயக்குநராக பணி



யாற்றி ஓய்வு பெற்றார். 2014 ஆம் ஆண்டு முதல் கூட்டுப் புலனாய்வுக் குழுவின் தலைவராகவும், 2018 ஆம் ஆண்டு தேசியப் பாதுகாப்பு துணை ஆலோசகராகவும் பணியாற்றினார். முழுக்க, முழுக்க காவல் துறை பின்புலம் கொண்ட அவரை நாகாலாந்து ஆளுநராக மத்திய அரசு நியமித்தது. இந்நிலையில், அவர் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதில் உள்நோக்கம் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இடையூறு செய்வதற்காகவே இது போன்ற நியமனங்களை மத்திய அரசு கடந்த காலங்களில் செய்திருக்கிறது. அந்தவகையில், ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி ஆர்.என்.ரவியை தமிழக ஆளுநராக நியமித்திருப்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. விளம்பரமே கூடாது என்று செயல்படும், நேர்மையான ஆட்சியைத் தந்து கொண்டிருக்கும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இடையூறு செய்யும் வகையிலேயே ஆர். என்.ரவியை ஆளுநராக மோடி அரசு நியமித்திருக்கிறதோ? என்று நான் சந்தேகப்படுகிறேன்” என கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

# தடையைமீறி பொது இடத்தில் இந்து முன்னணி அமைப்பினர் விநாயகர் சிலை வைத்து வழிபாடு

தஞ்சாவூர், செப். 11,

தஞ்சாவூரில் தடையை மீறி பொதுஇடத்தில் இந்து முன்னணி அமைப்பினர் விநாயகர் சிலை வைத்து வழிபாடு நடத்தியதால் நேற்றைய தினம் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியா முழுவதும் நேற்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. விழாவைக் கொண்டாடப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி, பொது இடங்களில் விழா கொண்டாடுவதற்கும் சிலைகள் வைப்பதற்கும் அனுமதியில்லை. அதேபோல் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லவும், சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கும் அனுமதி இல்லை.

தனி நபர்கள் தங்களது வீடுகளில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபடவும், அருகில் உள்ள நீர்நிலைகளில் தனிநபராக சென்று சிலையை கரைப்பதற்கு அனுமதிக்கப்படுவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அரசின் வழிமுறைகளை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த கட்டுப்பாடு உத்தரவுக்கு பா.ஜ.க. மற்றும் இந்து அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் தஞ்சை சீனிவாசபுரத்தில் இந்து



முன்னணி அமைப்பினர் 4 அடி உயரம் கொண்ட விநாயகர் சிலையை வைத்து வழிபாடு நடத்தினர். தகவலறிந்து வந்த காவல்துறையினர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தடையை மீறி பொது இடத்தில் விநாயகர் சிலை வைத்து வழிபட்ட இந்து முன்னணி அமைப்பினர் மீது வழக்கு பதிவு செய்ய இருப்பதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ரஞ்சன் ராமநாயக்க நாளை விடுதலை!

## சஜித் பிரேமதாஸ நம்பிக்கை



கொழும்பு, செப். 11

நாளை (செப்ரெம்பர் 12) தேசிய கைதிகள் தினத்தன்று ஐக்கிய மக்கள் சக்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படுவார் என்று நம்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனம் திரும்பி இருக்கும் என்று நம்புகிறேன் எனவும் நேற்று தனது ருவிட்டரில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 12 தேசிய கைதிகள் தினமாகும். 'கைதியும் ஒரு மனிதனே' என்று அறியப்பட்டாலும் பல சிறைச்சாலைகளில் கைதிகளின் நிலை பரிதாபகரமானதே. சிறைச்சாலைகளின் கொள்ளவுகளை விட 107 வீதத்தைவிட அதிகளவில் சனநெரிசல் நிரம்பியுள்ளதோடு உள்ளக பௌதீக பிரச்னைகள் எண்ணற்றவை.

சிறைச்சாலை என்ற எண்ணக்கருவுக்கு பதிலாக திருத்த மையங்கள் (Correction Centres) என்ற எண்ணக்கருவை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. இது குறித்து கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம் எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

# ஆபத்து இல்லாமல் நாட்டை திறக்கவே ஊரடங்கு நீடிப்பு

## சுகாதார அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



**கொழும்பு, செப்.11**

**ஆபத்து இல்லாமல் நாட்டைத் திறக்கும் வகையிலேயே தனிமைப்படுத்தல் ஊடரங்குச் சட்டம் செப்ரெம்பர் 21 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட பின்னர் நாட்டில் தொற்று நோயாளர் தொகை தொடர்ந்து குறைந்து வருவதால் ஆபத்து இல்லாத வகையில் மீண்டும் திறக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் எனவும் தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

தயவு செய்து தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் பொது சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடியுங்கள். இந்தக் காலப் பகுதியை விரைவாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்துங்கள் எனவும் நாட்டு மக்களிடம் சுகாதார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டு சுயாதீனமான விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, செப். 11

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அண்மையில் பாராளுமன்றில் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில், சுயாதீன விசாரணை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிக் பொலிஸ்மா அதிபருக்கு இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்த விசாரணைகளை மிக விரைவாக மேற்கொண்டு, அந்த அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவுக்கு விற்பனை செய்வதற்காக, கிழக்கு மாகாணத்திலிருந்து மணல் அகழப்படுவதாக அறியக் கூடியதாக உள்ளதென சாணக்கியன், கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றில் தெரிவித்தார்.

மாலைதீவில் தீவு ஒன்றை அமைப்பதற்காக இந்த மணல் விற்பனை செய்யப்படுவதாக அறியக்கூடியதாக உள்ளதென வும் அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரக் கட்சியை சார்ந்த அமைச்சர் ஒருவர் இதில் தொடர்புபட்டுள்ளதுடன், கிழக்கு மாகாண ஆளுநர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் மாலைதீவிலுள்ள தீவை நிரப்புவதற்கு, இலங்கையில் இருந்து மணல் அனுப்பப்பட்டுள்ளமை நிரூபிக்கப்படுமாக இருந்தால், அமைச்சுப் பதவியிலிருந்து மாத்திரமின்றி, பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக தயார் என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 11

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றை எதிர்த்துப் போராடும் இந்த சூழலில் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த கருத்துக்களை முன்வைத்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் புரையோடி காணப்பட்ட பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை விடுவிக்க முடிந்தாலும் கொரோனா தொற்றின் ஊடாக மற்றொரு பாதுகாப்பு அச்சுறுத்தலை நாடு எதிர்கொண்டுள்ளது என அவர் கூறினார்.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பின் ஸ்திரத்தன்மையிலேயே அபிவிருத்தி தங்கியுள்ளது என்றும் கமால் குணரத்ன குறிப்பிட்டார்.



# சமலுக்கு கொரோனா!

கொழும்பு, செப். 11

அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாள்களில் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் நெருங்கிப் பழகிவந்த சமல் ராஜபக்ஷ தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது அமைச்சர் சமல் ராஜபக்ஷ தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார மத்திய நிலையங்களை தொடர்ச்சியாக திறப்பதற்கு அனுமதி

கொழும்பு, செப். 11

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் பூரணை தினத்தை தவிர ஏனைய அனைத்து தினங்களிலும் சகல பொருளாதார மத்திய நிலையங்களையும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# 2 தடுப்பூசிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை கடந்தது

கொழும்பு, செப். 11

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கோவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்துக்கு அமைய இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை கடந்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, 10,211,537 பேருக்கு கோவிட் இரண்டாவது தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் இதுவரை 13,264,567 பேருக்கு கோவிட் முதலாவது தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அதேபோல், நேற்று முன் தினம் மாத்திரம் 111,870 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன் தினம் 201,834 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 889,110 பேருக்கு கோவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை 159,089 பேருக்கு ஸ்புட்னிக் V தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 43,450 பேருக்கு ஸ்புட்னிக் V தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், இதுவரை 410,224பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில், 237,163 பேருக்கு பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், 772,771 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில் மொடர்னா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 723,446 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2,865 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2,435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கையில் 95.8 வீதம் டெல்டா வைரஸ் பரவல்

கொழும்பு, செப். 11

இலங்கையில் 95.8 வீதம் கோவிட் -19 தொற்று நோய் பரவலுக்கு ஆபத்தான டெல்டா உரு திரிபு வைரஸே காரணமாக உள்ளதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் மூலக்கூறு நிறுவனத்தின் அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் உள்ள பல்வேறு மாகாணங்களில் வெவ்வேறு SARS-CoV-2 வைரஸ் வகைகளின் பரவல் குறித்து ஆய்வு செய்த பின்னர் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதை கண்டுபிடித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பல்வேறு மாகாணங்களில் வெவ்வேறு SARS-CoV-2 வகை உருதிரிபு வைரஸ் பரவலைக் கண்டறிவது பொருத்தமான கொள்கை முடிவுகளை எடுக்க அவசியமானது எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பேராசிரியர் நீலிகா மாளவிகே, மருத்துவர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

நாடு முழுவதும் தொற்று நோய் பரவலுக்கு சராசரியான 95.8 வீதம் டெல்டா திரிபே காரணமாக உள்ளது. சில மாகாணங்களில் அதன் பரவல் 84 வீதம் முதல் 100 வீதம் வரை உள்ளது எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# செப்ரெம்பர் 21இற்கு பின் ஊரடங்கை நீக்கலாமா?

## அறிக்கை வழங்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்



**கொழும்பு, செப். 11**

**செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவை நீக்கவேண்டுமானால், எந்த வகையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என்பது குறித்த அறிக்கை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கூட்டத் திலேயே ஜனாதிபதி அதிகாரி களுக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்தார் என இராணுவத் தள பதி சவேந்திர சில்வா தெரிவித் தார்.

மேலும் குறித்த சந்திப்பின் போது, மாணவர்களுக்கு தடுப் பூசி செலுத்துவது குறித்தும் பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த அறிக்கை களை சமர்ப்பிக்கவும் அதிகாரி களுக்கு அறிவுறுத்தப்பட்டது என அவர் மேலும் கூறினார்.

அத்தோடு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் தடுப்பூசி போட வேண்டும் என்றும் இதன் போது பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார். (அ)

# அம்பாந்தோட்டைக்கு பைசர் வழங்குவது அரசின் முடிவே!



கொழும்பு, செப். 11

அம்பாந்தோட்டை மாவட் டத்துக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்குவதற்கான முடிவு அரசாங்கத்தால் எட்டப்பட்டது என சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன கூறுகிறார்.

ஒவ்வொரு வகை தடுப்பூசி யையும் சம்பந்தப்பட்ட மாவட் டங்களுக்கு விநியோகிப்பது தொடர்பான முடிவு உலக சுகா தார நிறுவனத்தால் எடுக்கப்பட வில்லை. ஆனால், ஜனாதிபதி தலைமையிலான கோவிட் -19 ஜனாதிபதி பணிக்குழு அந்த முடிவை எடுத்தது - என்றார்.

நாட்டில் தடுப்பூசிகளின் விநியோக செயல்முறை உலக சுகாதார நிறுவனத்தால் தீர்மா னிக்கப்பட்டது என்று அரசாங் கத்தின் சில பிரிவுகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்க ளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த தகவலை, அசேல குண வர்த்தன தெரிவித்தார்.

இதற்கிடையில், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பைசர் தடுப்பூசிகளுக்கு கட் டளைகள் வழங்கப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

அதன்படி, அடுத்த மாதம் நான்கு மில்லியன் தடுப்பூசிகள் வர உள்ளன என்று அவர் குறிப் பிட்டார்.

# 24ஆவது இடத்தில் இலங்கை!

கொழும்பு, செப். 11

உலகில் சுற்றுலா மேற்கொள் ளக்கூடிய சிறந்த முதல் 25 நாடு களின் பட்டியலில் இலங்கை யும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மெரிடித் ஊடக குழுமத்தினால் வெளி யிடப்படும் பிரபல 'ட்ரவல் ப்ளஸ் லெஷர்' சுற்றுலா வழிகாட்டி சஞ்சிகை வெளியிட்டுள்ள புதிய சுற்றுலா வலயங்களின் பட்டிய லில் இலங்கை 24 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இப்பட்டியலில் இலங்கை மற் றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளில் ஒரே இடத்தை பிடித்துள்ளன.

சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ட்ரவல் ப்ளஸ் சஞ்சிகை யானது, இவ்வருடத்துக்கான சிறந்த சுற்றுலா தளங்களை தேர் தெடுத்தெடுப்பதற்கு, கடந்த ஜனவரி 11 ஆம் திகதி முதல் மே 10 ஆம் திகதிவரை இந்த ஆய்வு களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷக்களுக்கு இடையே வியாழன் இரவு முக்கிய சந்திப்பு

கொழும்பு, செப். 11

ராஜபக்ஷக்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் இரவு முக்கி யத்துவமிக்க சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் அதில் பங்கேற்கவில்லை என்று தெரியவருகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலை இத்தாலி செல் வதற்கு முன்னதாகவே மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (அ)

# ரஷ்யாவிடமிருந்து மேலும் ஒரு தொகை ஸ்புட்னிக் V தடுப்பூசிகள் இலங்கைக்கு!

கொழும்பு, செப். 11

ரஷ்யாவிடமிருந்து அடுத்த வாரம் மேலும் ஒரு தொகை ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் இலங் கைக்கு கிடைக்கவுள்ளன.

இவ்வாறு கிடைக்கும் தடுப் பூசிகள் முதலாவது தடுப் பூசியை பெற்றுக்கொண்டவர் களுக்கு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

120,000 பேர் இதுவரை ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுக் கொண்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார். (அ)

# மஸ்கெலியா வைத்தியசாலையில் கொவிட் தீவிர கண்காணிப்பு பிரிவு

கொழும்பு, செப். 11

மஸ்கெலியா பிரதேச வைத் தியசாலையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள, கொரோனா தொற் றாளர்களுக்கான தீவிர கண் காணிப்பு பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஹற்றன், கொட்டகலை றொட்டெக்ட் கழகத்தின் அனு சரணையில் இந்த கண்காணிப்பு பிரிவு புனர்நிர்மாணம் செய்யப் பட்டுள்ளது. இந்த கண் காணிப்பு பிரிவு பதில் மாவட்ட வைத்திய அதிகாரி.எம்.ஆர். என்.பாதிமா தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பதில் மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஆர்.எம் பாத்திமா தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், றொட்டெக்ட் கழகத்தின் முன்னாள் தலைவி அர்ச்சனா பஞ்சாட்சரம், தலை வர் தியாகராஜா, இணைப்புச் செயலாளர் சங்கரலிங்கம் ,ரூப தர்சன் டிக்கோயா வைத் திய சாலையின் மருத்துவர் அருள் குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அவசரகால விதிகளை பயன்படுத்தியும் பொருள்கள் விலை குறைக்கப்படவில்லை

## அரசாங்கத்தை சாடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, செப். 11

அவசரகால விதிகள் பிரகட னப்படுத்தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் எந்த வோர் உணவு பொருளினதும் விலையையும் அரசாங்கத்தால் குறைக்க முடியாமல் போயுள் ளது. எனவே, அதனை மீளப் பெறுவதே தற்போது பொருத்த மான நடவடிக்கையாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜய வர்த்தன தெரிவித்தார்.

களஞ்சியசாலைகளில் சீனி பதுக்கி வைக்கப்பட்டிருப்ப தால் அதன் விலை அதிகரிக்க வில்லை. மாறாக சீனியை இறக்குமதி செய்வதற்கு வர்த் தகர்களிடம் டொலர் இன் மையே அதன் விலை அதி கரிப்புக்கு காரணமாகும் என் றும் ருவான் விஜயவர்த்தன சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில்- அவசரகால விதிகள் பிரகட னப்படுத்தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் எந்தவோர் உணவு பொருளின் விலையையும் குறைக்க முடி யாமல் தோல்வியடைந்துள்ள அரசாங்கம், தற்போது செய்ய வேண்டியது சகல அவசரகால விதிமுறைகளையும் மீளப்பெறு வதாகும். மக்களுக்கு நியாய மான விலையில் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப் படும் என்ற போர்வையில் நிறை வேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தத் தவறியது தற்போதைய அரசாங்கத்தின் பெரும் பலவீனமாகும்.

1978 ஆம் ஆண்டு சூறாவளி ஏற்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன வும் , சுனாமி ஏற்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி சந்தி ரிகா பண்டாரநாயக்க குமார துங்கவும் அவசர கால விதி முறைகளை பிரகடனப்படுத்தி மக்களுக்கு நன்மைகளை செய் தனர். எனினும் கோவிட் நிலைமையின்போது ராஜபக்ஷ அரசாங்கம் பிரகடனப்படுத்தி யுள்ள அவசரகால விதிமுறைக ளால் மக்களுக்கு எவ்வித நன் மையும் கிடைக்கப்பெற வில்லை.

மேற்கூறப்பட்ட முதல் இரு சந்தர்ப்பங்களிலும் அவசரகால விதிமுறைகள் பிரகடனப்படுத் தப்பட்டபோது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வில்லை. ஆனால் தற்போது அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவசரகால விதிமுறைகளை பிரகடனப்படுத்தி சீனி மற்றும் அரிசி என்பவற்றை கைப்பற்று வதற்கு முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புக்களில் மகாவலி வலயத்தை அண்மித்த பகுதி யில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத்தின் களஞ்சியசாலையும் முற்றுகை யிடப்பட்டது. எவ்வாறிருப்பி னும் அதன் பின்னரும் அவர் இராஜாங்க அமைச்சு பதவியை வகிப்பதற்கான தார்மீக உரிமை உள்ளதா? - என்றார். (அ)

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்**

# முன்னாள் சட்டமா அதிபரிடமும் விசாரணை நடத்தப்படக்கூடும்?

கொழும்பு, செப். 11

ஈஸ்டர் தாக்குதல் சம்ப வத்தை மையப்படுத்தி முன் னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் சி.ஐ.டி யினர் அவரிடம் விசாரணை நடத்தக்கூடும் என்று பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணவர்தன தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, 21/4 தாக்குதல் சம்ப வத்தின் பின்னணியில் பாரிய சூழ்ச்சி உள்ளதென முன்னாள் சட்டமா அதிபர் கருத்து



வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் அவரிடம் சி.ஐ.டியினர் விசாரணை மேற் கொள்வார்களா என எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சட்டமா அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவரும் சாதாரண பிரஜையே. நீங்கள் கூறிய விடயம் குறித்து நாமும் அவதானம் செலுத்தி யுள்ளோம். யாராவது ஏதேனும் கருத்து வெளியிட்டால், அது சி.ஐ.டியின் விசாரணையுடன் சம்பந்தப்பட்ட விடயமெனில் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும். எனவே, எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

# இலங்கையில் மோசமான மனித உரிமை நிலைமை

## ஐ. நா. கடுமையாக ஆய்வு செய்யவேண்டும் என கோருகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, செப்.11

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலைமையை கடுமையாக ஆய்வு செய்து உண்மையான முன்னேற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.**

எதிர்வரும் கூட்டத்தொடரில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் மற்றும், மக்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி பலவீனமடைவது குறித்து தங்கள் எச்சரிக்கையை வெளிப்படுத்தவேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச மனித உரிமை கடமைகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை கொடுக்க தங்கள் விருப்பத்தை மற்ற நாடுகள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியான சர்வதேச கவனமும் அழுத்தமும் சிறுபான்மைச் சமூகங்கள், ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் அபாயங்களைக் குறைக்க உதவும் என்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப் பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி கூறியுள்ளார்.

அத்தோடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வடக்கு- கிழக்கில் சிறுபான்மையினரை கைது செய்து அவர்களை அச்சுறுத்தும் செயல்பாட்டை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பருத்தித்துறையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த மூதாட்டியின் உடல் மல்லாவிக்கு!

## விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 11

பருத்தித்துறைப்பகுதியில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த வயோதிபப்ப பெண்ணின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், நேற்று முன் தினம் இரவு பிரேத அறையில் கொரோனா விதிமுறைப்படி அடைக்கப்பட்டு இருந்த சடலம் உடைக்கப்பட்டு உறவினர்களால் பார்வையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மல்லாவியை சேர்ந்த 81 வயதான வயோதிபப் பெண் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார்.

அவர் அல்வாய் வடமத்தி, பருத்தித்துறையை சேர்ந்த உறவினர்களின் வீட்டில் இறுதிக்காலத்தில் தங்கியிருந்துள்ளார். அவரது பிள்ளைகள் மல்லாவியில் வசித்து வருகின்றார்கள். அரச உத்தியோகத்தர்களாக பணிபுரிகிறார்கள்.

சில வாரங்களின் முன்னர் விபத்தொன்றில் அல்வாயை சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். அவரது இறுதிச் சடங்கு சுகாதார விதிமுறையை மீறி இடம்பெற்றது.

இந்த இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட ஒருவருக்கு- தற்போது உயிரிழந்த மூதாட்டியின் மகனொருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது.

அவருடன் தொடர்பிலிருந்தவர்கள் என்ற அடிப்படையில் சுகாதாரப் பிரிவினர் தடமறிந்து பரிசோதனை மேற்கொண்டனர். இதன்படி அல்வாயில் இறுதிச்சடங்கு நடந்த விடயத்தை சுகாதாரப் பிரிவினர் தெரிந்து நடவடிக்கையெடுத்தபோது, அல்வாயில் தொடர்புடையவர்கள் சிலர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

மல்லாவியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர், அல்வாயில் தங்கியிருந்த தாயாரையும் சந்தித்துவிட்டே சென்றிருந்தார்.

தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து அல்வாயில் பலர் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் மூதாட்டி கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார்.

இதையடுத்து, மல்லாவியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மகனொருவரின் வீடு தனிமைப் படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அல்வாய் சென்று, தாயாரின் உடலை மல்லாவி கொண்டு செல்ல முயன்றனர்.

எனினும், சுகாதாரத்துறையினர் இதற்கு அனுமதி மறுத்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறிவிட்டனர்.

இதன்படி, சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது.

இதன் பின்னர், கொரோனா தொற்று உறுதியான மூதாட்டியின் சடலம் மல்லாவி கொண்டு செல்ல உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத்துறையின் எந்தப் பகுதி இதற்கு அனுமதியளித்தது என்ற கேள்வியெழுந்துள்ளது.

மல்லாவிக்கு கொண்டு செல்லப்பட்ட மூதாட்டியின் சடலம், மல்லாவி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் சிலர் சடலத்தை பார்வையிட்டுள்ளனர். சடலம் சுற்றப்பட்ட பொலீத்தின் உடைக்கப்பட்டு, உடலுக்கு மேல் ஆடை போர்த்தப்பட்டிருந்ததுடன், திருநீறும் அணிவிக்கப்பட்டிருந்தது.

அந்த படங்கள் சமூக ஊடகங்களிலும் வெளியாகின.

இந்த விவகாரம் சர்ச்சையானதையடுத்து, சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் வழக்கு பதிவும் செய்துள்ளனர்.

சடலத்தை மல்லாவி பிராந்திய சுகாதார பிரிவினர் பொறுப்பெடுத்து தகனம் செய்யுமாறும், யாழிலிருந்து சடலம் எவ்வாறு மல்லாவிக்கு கொண்டு வரப்பட்டது என்றும் ,சடலம் உறவினர்களால் திறக்கப்பட்டமை தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொண்டு உரியவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலங்கள் தேங்கியுள்ளமையால் நெருக்கடி

யாழ்ப்பாணம், செப். 11

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் கொரோனாவால் மரணமடைந்தவர்களின் சடலங்களை குளிரூட்டியில் வைத்து பேண முடியாத நிலையில் சடலங்கள் தேங்கி காணப்படுவதால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் வே.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது வைத்தியசாலையில் கடந்த மே மாதம் 17ஆம் திகதி கொரோனா நோயாளர் விடுதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 556 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 21 பேர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். 20 பேர் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்தனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மின் தகனம் செய்வதற்கு உள்ள நெருக்கடி நிலைமைகள் காரணமாக வைத்தியசாலை பிரேத அறையில் சடலங்கள் தேங்கி காணப்படுகின்றன.

பிரேத அறையில் 6 சடலங்களையே குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கக்கூடிய வசதிகள் உள்ள நிலையில் இன்றைய நிலவரப்படி 11 சடலங்கள் காணப்படுகின்றன. எதிர்வரும் நாள்களில் மரணங்கள் ஏற்பட்டால் சடலங்களை பாதுகாப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

யாழில் ஒரு மின் தகன மயானம் உள்ளது. அதிலேயே யாழ். மாவட்டத்தில் கொரோனோ தொற்றுக்கு உள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்கள் எரியூட்டப்பட்டு வருவதனால் சடலங்களை எரியூட்டுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

தாமதங்களை கருத்தில் கொண்டு வெளி மாகாணத்தில் உள்ள மின் தகன மயானங்களுக்கு சடலங்களை கொண்டு சென்று எரியூட்டுவதற்கு உயிரிழந்தவர்களின் உறவினர்கள் முன்வரவேண்டும்

அதேவேளை , உயிரிழந்தவர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர் எனில் மின் தகனச் செலவு உள்ளடங்கலாக அனைத்துச் செலவுகளையும் நாம் பொறுப்பேற்கிறோம். அவற்றை நாம் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எனவே மக்கள் சளி , தடிமன் , காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து நோய்களுக்கும் பயமின்றி வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் வைத்திய தேவைகள் உள்ளிட்ட தேவைகளுக்கு வைத்திய சாலையின் பொது தொலைபேசி இலக்கங்களான 0212263261 மற்றும் 0212263262 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும்- என்றார்.

(அ)

# அரிசி பற்றாக்குறையின் பின்னணியில் பெரும் அரிசி ஆலை உரிமையாளர்கள்!

கொழும்பு, செப். 11

பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் அரிசியை சேமித்து வைத்திருந்ததால், சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு அதிக விலையில் விற்கப்படும் நிலையேற்பட்டது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரசு நிர்ணயித்த அதிகபட்ச சில்லறை விலையில் அரிசி கையிருப்பை விற்பனை செய்வதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் விலைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அவை தோல்வியுற்றன. இதன் விளைவாக பொதுமக்கள் ஒரு கிலோ நாட்டு அரிசியை 120 ரூபாய்க்கும், சம்பா ஒரு கிலோவை 150 ரூபாய்க்கும் வாங்க வேண்டியிருந்தது.

ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியை 98 ரூபாய்க்கும் மற்றும் ஒரு கிலோ சம்பாவை 103 ரூபாய்க்கு விற்க பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுடன் அரசு ஒப்பந்தம் செய்து கொண்டது.

அவர்கள் சந்தைக்கு அரிசி வழங்குவதை நிறுத்திவிட்டனர். லங்கா சதொசாவால் அழைக்கப்பட்ட கேள்விகோரல்களை சந்திக்க தவறிவிட்டனர்.

அரிசியை சலுகை விலையில் விற்ற சதொசவில் கையிருப்பு தீர்ந்துவிட்டது.

பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் தினமும் 500,000-600,000 கிலோ அரிசியை வழங்கி வந்த நிலையில், தட்டுப்பாட்டை உருவாக்குவதற்காக தங்கள் விநியோகத்தை 30,000 கிலோவாக குறைத்தனர்.

அரிசி பற்றாக்குறையை உருவாக்கும் திட்டமிடப்பட்ட சதியை முறியடிக்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நியமிக்கப்பட்டார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் பொறுப்பு, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பற்றாக்குறையின்றி பொருட்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை உருவாக்குவதாகும்- என்றார்.

# 14ஆம் திகதி பதவி விலகுகிறார் மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மன்

கொழும்பு, செப். 11

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யு.டி லக்ஷ்மன் எதிர்வரும் 14ஆம் திகதி ஆளுநர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளாரெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.

# பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்து சாமி



முருகபூபதி

மகாகவி பாரதிக்கு கிடைத்த நண்பர்கள் பல்வேறு குணாதிசயங்கள் கொண்டவர்கள். அவர்களில் சித்தர்கள், ஞானிகள், அறிஞர்கள், வக்கீல், வர்த்தகர், தீவிரவாதிகள், விடுதலை வேட்கை மிக்கவர்கள், பத்திரிகாசிரியர்கள், சாதாரண அடிநிலை மக்கள் , பாமரர்கள் என பலதரத்தவர்களும் இருந்தனர். அவர் சந்தித்த சித்தர்கள் அவருக்கு ஞான குருவாகியுமிருக்கின்றனர்.

இவ்வாறு அவரின் வாழ்வில் மாற்றங்களையும் சிந்தனைப்போக்கில் புதிய திசைகளையும் தந்தவர்களின் வரிசையில் தான் எங்கள் யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம் அவர்களும் வருகிறார்.

பாரதி தனது வாழ்நாளில் சந்தித்த சித்தர்களில் மாங்கொட்டைச்சாமி என அழைக்கப்பட்ட குள்ளச்சாமி புதுச்சேரியில் அறிமுகமாகிறார். நாலரை அடி உயரமுள்ள அவருடைய ரிஷி மூலம் எவருக்கும் தெரியாது.

வீதியோரத்தில் படுத்துறங்குவார். மண்ணில் புரள்வார். நாய்களுடனும் அவருக்கு சண்டை வரும். கள்ளும் அருந்துவார். கஞ்சா புகைப்பார். பிச்சையும் எடுப்பார். இருந்தும் அவர் துணி வெளுக்கும் தொழிலாளி. ஒரு சமயம் பாரதியிடத்தில் “நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின் மேல் சுமக்கிறேன்” என்றார்.

மற்றும் ஒருநாள் பாரதி, அந்தக் குள்ளச்சாமியிடம், “ஞானநெறியில் செல்லவிரும்புபவன் எந்தத்தொழிலைத் தேர்ந்தெடுக்கவேண்டும்…?” என்று கேட்கிறார்.

அதற்கு அந்தச்சாமியார், “முதலில் நாக்கை வெளுக்கவேண்டும், பொய், கோள், கடுஞ்சொல், இன்னாசொல், தற்புகழ்ச்சி என்பன கூடாது. உண்மையைத்தவிர வேறொன்றும் இந்த நாக்கு பேசலாகாது. அச்சத்தை அகற்றவேண்டும். அதற்கு மனதினுள் இருக்கும் இருளைப்போக்கவேண்டும்” எனச்சொல்லியிருக்கிறார். அதன் பிறகு,

உள்ளத்தில் உண்மையொளி
உண்டாயின்.....
அச்சமில்லை... அச்சமில்லை....
மனதிலுறுதி வேண்டும்...

முதலான சாகாவரம் பெற்ற வரிகள் பாரதியிடத்தில் பிறக்கின்றன.

புதுவையில் பாரதி சந்தித்த யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம் அவர்களின் கல்லறை பருத்தித்துறை வியாபாரிமூலையில் இருக்கிறது.

ஆனால், அங்கிருக்கும் பலருக்கு இது தெரியாது. சில வருடங்களுக்கு முன்னர் வடமராட்சிக்குச் சென்றேன். ஊடகவியலாளரும் எனது பிரியத்திற்குரிய இலக்கிய நண்பருமான ரவிவர்மாவை அழைத்துக்கொண்டு, வியாபாரிமூலையில் அமைந்துள்ள பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம் அவர்களின் சமாதிக்கோயில் தரிசனத்திற்குச்சென்றேன்.

“தான் வடமராட்சியை சேர்ந்தவன். இந்தக்கோயிலின் பின்னால் இப்படி ஒரு சரித்திரம் இருப்பது தனக்கு இதுவரையில் தெரியவில்லையே” என்றார் ரவிவர்மா.

இங்கு சென்று திரும்பியபின்னர், யாழ்ப்பாணத்தில் நண்பர் ஈழநாடு குகநாதன் நடத்திவரும் டான் தொலைக்காட்சியகத்திற்கும் நேர்காணலுக்காகச் சென்றேன். எனது பயணம் - மற்றும் எனது ஆய்வு இலங்கையில் பாரதி தொடர்பாக இரண்டு அங்கமாக அந்த நேர்காணலை பதிவுசெய்தார்கள்.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தோழர் தவராசா, நான் தங்கிநின்ற கோண்டாவிலுக்கு நேரில் வந்து சந்தித்து உரையாடியபோது, அவரிடத்திலும் பாரதியின் ஞானகுரு பற்றி பிரஸ்தாபித்தேன். அவரும் அந்த சமாதிக்கோயிலுக்கு செல்லும் பாதையை கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பாரதி பிறந்த எட்டயபுரத்திற்கு 1984 இல் சென்றுவந்து வீரகேசரியில், நான் கண்ட தரிசனங்களை எழுதியிருக்கின்றேன். பாரதி பிறந்த வீடு, அவர் மனைவி செல்லம்மாவுடன் நடமாடித்திரிந்த மாடவீதி, பாரதி அமர்ந்து பாடல்கள் இயற்றிய தெப்பக்குளத்தின் படித்துறை, பாரதி பட்டம் பெற்ற அரண்மனை, மற்றும் பாரதி மணிமண்டபம் யாவும் எனது அன்றைய கட்டுரையில் விரிவாக எழுதியிருந்தேன்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில், பாரதி இறுதிக்காலத்தில் வாழ்ந்த திருவல்லிக்



கேணி இல்லத்தையும் பாரதியை மதம் பிடித்த யானை துக்கியெறிந்த சம்பவம் நிகழ்ந்த பார்த்தசாரதி கோயிலையும் தரிசித்துவிட்டு வந்து எழுதியிருக்கின்றேன்.

எனினும், வியாபாரிமூலையிலிருக்கும் யாழ்ப்பாணத்துச்சாமியின் சமாதி கோயிலை தரிசிக்கும் சந்தர்ப்பம் காலம் தாழ்த்தித்தான் கிடைத்தது. அதன் வரலாறு பற்றியும் எனது ‘இலங்கையில் பாரதி’ ஆய்வில் விரிவாக எழுதியிருக்கின்றேன்.

இந்தத் தகவல்களை நண்பர் ரவி வர்மாவிடம் சொன்னதும், அவரும் உடன்வந்து தனது முகநூலில் படங்களுடன் ஒரு பதிவை எழுதியிருக்கிறார். அதற்கு தனது எதிர்வினையாக எழுத்தாளர் நந்தினி சேவியர் எழுதிய குறிப்புகளையும் எனது கவனத்திற்கு அனுப்பியிருந்தார்.

அதனை இங்கு தருகின்றேன்:

யாழ்ப்பாணத்துச் சாமிதான் பாரதியின் ஞானகுரு என்பதை ஆராய்ந்து நிரூபித்தவர் அ.ந.கந்தசாமி. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1963 மே மாதம் வியாபாரிமூலையில் இருந்த சாமியின் சமாதியை அடையாளம்கண்டு அதனை ஒரு மண்டபமாக அமைத்தது.

அந்த மண்டபத்தின் தூணில் மு.போ.எ. சங்கம் வைத்த கல்பதிவை நான் கண்டிருக்கிறேன். இப்போது அது உள்ளதோ தெரியவில்லை. ரவிவர்மாவின் பதிவு எனக்கு சில நினைவு களைத் தந்தது. அவருக்கு நன்றி.

பிரிட்டிஷாரின் அடக்கு முறையினால் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்த பாரதிக்கு, இங்கும் பல நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களில் கிருஷ்ணமாச்சாரியார் என்னும் இயற்பெயர் கொண்ட குவளைக்கண்ணன் முக்கியமானவர். இவர்தான் பின்னாளில் 1921 செப்ரெம்பர் மாதம் பாரதியை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் மதம் பிடித்த யானையிடமிருந்து காப்பாற்றியவர்.

மனைவி செல்லம்மா அயல்வீட்டிலிருந்து கடனாக வாங்கிவந்த அரிசியையும் “காக்கை குருவி எங்கள் ஜாதி” என்று பாடி காகங்களுக்கு அள்ளித்தூவிய இரக்கமுள்ள பாரதி, கோயில் யானைக்கு வாழைப்பழமும் தேங்காயும் கொடுத்தது ஆச்சரியமில்லை. காகம் குருவிகளுக்கு மதம் பிடிக்காது. பாரதியை அவை கொத்தவில்லை. அந்தக்கோயில் யானைக்கு மதம் பிடித்திருந்தது பாரதிக்குத் தெரிய நியாயம் இல்லை. குவளைக் கண்ணன் கண்ணிமைக்கும் நேரத்தில் அங்கு குதித்து அவரை காப்பாற்றினாலும், அதன் பின்னர் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமலேயே வயிற்றுவலி கண்டு அதே செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி பாரதி மறைந்தார். இறுதியாத்திரையில் சென்ற விரல் விட்டு எண்ணத்தக்க மனிதர்களில் தேம்பித் தேம்பி அழுது கொண்டு வந்த குவளைக்கண்ணன், புதுவையிலிருந்து சென்னை வரையில் பாரதியின் நெருக்கமான நண்பராகவிருந்தார். இவர்தான் புதுவையில் பாரதிக்கு எங்கள் யாழ்ப்பாணத்துச்சாமியை அறிமுகப்படுத்தியவர்.

பாரதி தமது சுயசரிதையில் இந்தச் சாமி பற்றி இவ்வாறு சொல்கிறார்:

“குவலயத்தின் விழி போன்ற யாழ்ப்பாணத்தான், தேவிபதம் மறவாத தீர ஞானி சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான் பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி, பரமபத வாயிலெனும் பார்வையாளன், காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும் கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக்கண்டேன் ”

இவ்வாறு பாரதி தனது சுயசரிதை எழுதுவதற்கும் தூண்டுகோளாக இருந்தவர்தான் குவளைக்கண்ணன்.

பாரதி புதுவைக்கு வந்ததும் முதலில் வீடுகொடுத்து அடைக்கலம் தந்த குப்புசாமி ஐயங்காரின் உறவினர்தான் குவளைக்கண்ணன். புதுவையில் பாரதி வெளியிட்ட இந்தியா பத்திரிகையின் வாசகரான குவளைக்கண்ணன், பாரதியின் அந்த வாடகைக்குடியிருப்புக்கு வரும்போதெல்லாம், நாலாயிர திவ்விய பிரபந்தத்தை பாடுவது வழக்கம்.

“பத்து ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்புத்தான் நாலாயிரம்” என்று குவளைக்கண்ணன் சொன்னதும், பாரதிக்கு உற்சாகம் பிறந்துவிட்டது.

“அவர்கள் பத்துப்பேர் சேர்ந்து பாடினார்கள். இதோ பார்... நான் தனிஒருவனாக ஆறாயிரம் பாடிக்காட்டுகின்றேன்.” எனச்சவால் விட்டு, பாரதி பாடியதுதான் பின்னாளில் பாரதி ‘அறுபத்தாறு’ என்ற தலைப்பில் வெளியாகின்றன.

இதில் என்ன வித்தியாசம்...? ஆழ்வார்கள் தங்கள் இறைவனைப் புகழ்ந்து பாடினார்கள். ஆனால், பாரதி தான் சந்தித்த நண்பர்களையும் சித்தர்களையும் புகழ்ந்து பாடினார்.

இவ்வாறு பாரதியிடம் புதிய

## மகாகவி பாரதி மறைந்து இன்றுடன் நூறு ஆண்டுகள்

படைப்பை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த குவளைக்கண்ணனால் அறிமுகப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்துச்சாமி அருளம்பலம், பாரதி திருநெல்வேலி எட்டயபுரத்தில் பிறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதாவது 1880 இல் இலங்கையில் வடபுலத்தில் அல்வாயில் பிறந்துள்ளார்.

பாரதி மறைந்து சுமார் 21 ஆண்டுகளின் பின்னரே வியாபாரி மூலையில் சமாதியானார்.

இவர் பற்றி பாரதி மேலும் இவ்வாறு சொல்லியிருக்கிறார்:

.... மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப்பெய்யும் வானவர்கோன், யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்சங்கரனென்றெப்போதும் முன்னே கொண்டு சரணடைந்தால் அது கண்டீர் சர்வசித்தி.

பாரதி வர்ணித்துப்போற்றியிருக்கும் இந்த யாழ்ப்பாணத்தீசன், பாரதி சென்னையில் 1921 இல் மறையும் போதும் புதுவையில்தான் வாழ்ந்திருக்கிறார். அதன்பின்னர், அவர் இலங்கை திரும்பி, மீண்டும் தமிழகம் சென்று 1942 ஆம் ஆண்டளவில் ஊர் வந்து மறைந்தார்.

■ தி.முருகன்

# 9/11 உலகின் போக்கை மாற்றிய நாள்



இருபது இலட்சம் ஆண்டுகளைக் கடந்த மனித இனம் வெறும் 20 ஆண்டுகளில் தலைகீழாக மாறிவிடும் என்று சொன்னால் நம்புவதற்கு அதிர்ச்சியாக இருக்கும். 2001 செப்ரெம்பர் 11 அமெரிக்க உலக வர்த்தக மையத் தாக்குதலுக்குப் பிறகு உலகம் நிஜமாகவே தலைகீழாகி இருக்கிறது. அன்று காலை 8.45 மணிக்கு அல் ஹைடா தீவிரவாதி முகமது அட்டா ஓர் அமெரிக்கன் எயர்லைன்ஸ் விமானத்தை உலக வர்த்தக மைய கோபுரத்தில் மோதி நொறுங்கிவிழச் செய்த நிமிடத்திலிருந்து, உலகத்தின் மாண்புகளும் நொறுங்கி விழ ஆரம்பித்தன.

2,983 பேரை பலிகொண்ட அந்தத் தாக்குதலால் அமெரிக்கா நிலைகுலைந்தது. 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' என அந்த தேசம் எடுத்த நடவடிக்கைகள் பலவும் உலகையே நிலைகுலையச் செய்தது நிஜம். அந்தத் தாக்குதலின் 20ஆம் ஆண்டு நினைவு தினத்தில், உலகம் மீண்டும் தீவிரவாதம் பற்றிப் பேசுகிறது. ஆப்கானிஸ்தானை முன்பைவிட மோசமான தேசமாக மாற்றிவிட்டு அமெரிக்கா அங்கிருந்து வெளியேறியிருக்கிறது.

2001 செப்ரெம்பர் 11 என்பதை எல்லா நாளையும் போல மற்றொரு நாளாகக் கருத முடியாது. அன்றிலிருந்து உலகில் ஒரு புதிய யுகம் தொடங்கியது. பூமிப்பந்தின் எந்த மூலையிலும் இருக்கும் தீவிரவாதிகளை வேட்டையாடுவதற்கான லைசன்ஸை அமெரிக்கா எந்த எதிர்ப்பும் இல்லாமல் பெற்றுக்கொண்டது. ஆப்கானிஸ்தானில் இறங்கி தலிபான் அரசை வீழ்த்தியதுடன் அது முடியவில்லை. 'பேரழிவு ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கிறது' என்று குற்றம் சாட்டி, அந்த நாட்டின் மீது போர் தொடுத்தது. ஈராக்கை ஆட்சி செய்துவந்த சதாம் ஹூசைனைச் சிறை பிடித்தது. அவர் மீது ஒரு விசாரணை நடத்தி மரண தண்டனை விதித்தது.

அதன் தொடர்ச்சியாக அரபு வசந்தம் என்ற பெயரில் பல நாடுகளில் அரசுகளுக்கு எதிராக நிகழ்ந்த மக்கள் போராட்டங்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஊக்கமும் உதவியும் கொடுத்தன. டுனீஷியா நாட்டில் ஒரு சின்னத் தீப்பொறியாகக் கிளம்பி லிபியா, எகிப்து, ஏமன், சிரியா என்று பல நாடுகளிலும் இந்தக் கிளர்ச்சி பரவியது. வளைகுடா நாடுகளிலும், வட ஆபிரிக்க நாடுகளிலும் இதனால் மக்கள் அமைதியிழந்தனர். டுனீஷியா, எகிப்து போன்ற ஜனநாயகப் பக்குவமுள்ள நாடுகள் இதில் பிழைத்துக்கொண்டன. மற்ற நாடுகளின் நிலை சோகம்.

லிபிய அதிபராக இருந்த கடாபி, மக்கள் கிளர்ச்சிக்கு பயந்து தலைமறைவானார். ஒரு குழப்பமான சூழ்நிலையில் அவர் கொல்லப்பட்டார். சிரியாவிலோ நிலைமை தலைகீழ். அதிபராக இருக்கும் பஷார் அல் ஆசாத் இரும்புக்கரம் கொண்டு கிளர்ச்சியை ஒடுக்கினார். இதனால் நாடே போர்க்களமாக மாற, ஆயிரக்கணக்கான சிரிய மக்கள் அகதிகளாக அங்கிருந்து வெளியேறினார்கள்.

9/11 தாக்குதலுக்குப் பிறகு இஸ்லாமிய தேசங்களில் நிலவிய அமைதியின்மை, பலரையும் அகதிகளாக்கி, தங்கள் தாய்மண்ணிலிருந்து வெளியேற்றியது. அவர்களை ஏற்றுக்கொள்வதில் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தயக்கம் காட்டின. அகதிகளையும் தீவிரவாதிகளையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க அந்த தேசங்கள் தயாராக இல்லை. சிரியாவிலிருந்து கூட்டம் கூட்டமாக இரவு நேரத்தில் படகுகளில் ஏறி இத்தாலிக் கரையை அடைவதற்கு மக்கள் பரிதவித்தார்கள். அப்படி ஒரு பயணத்தில் படகு மூழ்கி, அய்லான் குர்தி என்ற மூன்று வயதுச் சிறுவன் இறந்து கரை ஒதுங்கிய புகைப்படம், உலகின் மனசாட்சியை உலுக்கியது. தீவிரவாதமும், அதற்கு எதிரான போரும் எப்படி அப்பாவிகளின் வாழ்வைக் கலைத்துப் போடுகிறது என்பதற்கான சாட்சியம் அது.

**"9/11 தாக்குதல் வேறுவிதமாகவும் உலகை மாற்றியது. தீவிரவாதத்துக்கும் விடுதலைப் போருக்கும் வித்தியாசம் தெரியாமல்போனது. நிஜமாகவே இன ஒடுக்குமுறைக்கு ஆளாகி தங்களுக்கான விடுதலைக்குப் போராடிய பல குழுக்களுக்கு அதுவரை கிடைத்துவந்த ஆதரவும் அனுதாபங்களும் காணாமல்போயின."**

இன்று உலகிலேயே அதிக மக்கள் அகதி முகாம்களில் வாழும் பகுதியாக மத்திய கிழக்கு தேசங்கள் மாறியிருக்கின்றன. போர்க்களமான தங்கள் நாடுகளிலிருந்து துருக்கி, எகிப்து, இரான், லெபனான் என்று பல நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் வந்து வசிக்கிறார்கள். தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா தொடங்கிய போர், அதிகாரபூர்வமாக ஆப்கானிஸ்தானில் முடிந்துவிட்டது. ஆனால், இராக், சிரியா, ஏமன் என்று பல நாடுகளில் யாரும் இன்னமும் ஆயுதங்களைக் கீழே போடவில்லை.

தீவிரவாதிகளை வேரறுக்கக் கிளம்பிய அமெரிக்காவின் பயணம், பின்லேடனின் அல் ஹைடாவை முழுவதுமாக ஒழித்துக்கட்டவில்லை. அமெரிக்காவில் நடத்திய தாக்குதலுடன் பின்லேடன் நிற்கவில்லை. 2004ஆம் ஆண்டு ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நான்கு ரயில்களில் அல் ஹைடா நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல்களில் பலர் இறந்தார்கள். ஐரோப்பாவில் நிகழ்ந்த மிக மோசமான தீவிரவாதத் தாக்குதலாக இது கருதப்படுகிறது. இதன்பின் அமெரிக்கா இன்னும் உக்கிரமாக தீவிரவாதிகள் வேட்டையைத் தொடர்ந்தது.

ஆனால், அது இன்னும் பல தீவிரவாதக் குழுக்கள் உருவாகவே காரணமானது. ஈராக்கையும் சிரியாவையும் அமெரிக்கா நிலைகுலையச் செய்தபிறகு அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு வளர்ந்து ஒரு பகுதியையே பிடிக்கும் அளவுக்கு மாறியது. பிறகு அவர்களை வீழ்த்த அமெரிக்கா அங்கு போனது. அமெரிக்கா இங்கு வந்தபோது அல் ஹைடாவும் தலிபான்களும் மட்டுமே அச்சுறுத்தலாக இருந்தார்கள். இப்போது பெரியதாகவும் சிறியதாகவும் ஏராளமான குழுக்கள் வந்துவிட்டன.



9/11 தாக்குதல் வேறுவிதமாகவும் உலகை மாற்றியது. தீவிரவாதத்துக்கும் விடுதலைப் போருக்கும் வித்தியாசம் தெரியாமல்போனது. நிஜமாகவே இன ஒடுக்குமுறைக்கு ஆளாகி தங்களுக்கான விடுதலைக்குப் போராடிய பல குழுக்களுக்கு அதுவரை கிடைத்துவந்த ஆதரவும் அனுதாபங்களும் காணாமல்போயின. ஆயுதம் ஏந்திய எல்லோரையும் ஆபத்தாகப் பார்த்து ஒடுக்கினார்கள். இதைச் செய்த சர்வாதிகார ஆட்சியாளர்கள் பலருக்கு மேற்கத்திய உலகின் உதவி தாராளமாகக் கிடைத்தது. இலங்கை அதற்கு ஓர் உதாரணம்.

9/11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவின் ஒட்டுமொத்த கவனமும் இஸ்லாமிய தேசங்களின் பக்கம் திரும்பியது. அவர்களின் வெளியுறவுக் கொள்கையே இந்த நாடுகளைச் சார்ந்ததாக மாறியது. இந்த இடைவெளியைப் பயன்படுத்தி சீனா பல நாடுகளை வசீகரித்தது. ஆபிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, தெற்காசியா என எல்லா பிராந்தியங்களிலும் காலூன்றி ஒரு வல்லரசாக உயர்ந்தது. அமெரிக்கா சற்றே சுதாகரித்துத் திரும்பிப் பார்ப்பதற்குள் சீனா பெரிய சக்தியாக வளர்ந்துவிட்டிருந்தது. அமெரிக்காவும் ரஷ்யாவும் பனிப்போர் செய்த காலம் போய், இப்போது அமெரிக்காவும் சீனாவும் பனிப்போர் செய்யும் காலம் வந்துவிட்டது. இதில் சீனாவின் கையே ஓங்கியிருப்பதில் அமெரிக்க அரசியல்வாதிகளுக்குத் தாளமுடியாத ஆதங்கம் எழுந்துள்ளது.

9/11 தாக்குதலுக்கு முன்பு பயணங்கள் இனிமையாக இருந்தன் ஓர் ஏழை நாட்டிலிருந்து கல்வி, வேலை வாய்ப்பு போன்ற காரணங்களுக்காக வளர்ந்த நாடுகளுக்குக் குடிபெயர்வது சுலபமாக இருந்தது. சக மனிதர்களை அவர்களின் பெயரைப் பார்த்து, அடையாளங்களைப் பார்த்து, தோற்றத்தைப் பார்த்து, நிறத்தைப் பார்த்து சந்தேகம் கொள்ளும் உலகமாக இப்போது மாறியிருக்கிறது. கடந்த 2011ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அமெரிக்கா சென்றபோது விமான நிலையத்தில் அவரை உடைகள் மற்றும் ஷூக்களைக் கழற்றும்படி கட்டளை போட்டு சோதனை செய்தனர். இந்த விவகாரம் சர்ச்சையாகி அமெரிக்கா மன்னிப்பு கேட்டது. ஆனால், இன்றும் இந்த சோதனை நூற்றுக்கணக்கானவர்களுக்கு நிகழ்ந்துகொண்டுதானிருக்கிறது. எவரையும் ஆபத்தான தீவிரவாதியாகப் பார்க்கும் இந்த மனநிலையை அந்தத் தாக்குதல்தான் உருவாக்கியது.

எல்லாவற்றுக்கும் மேலாக உலக அரசியலையும் அந்தத் தாக்குதலே உருமாற்றியது. இணக்கமான மேற்கத்திய தேசங்களில்கூட வெறுப்பு அரசியல் செய்யும் தலைவர்கள் உருவானார்கள். இந்தச் சமூக வலைதள உலகில் அவர்கள் தங்கள் பிரசாரங்களை இன வெறுப்பாகக் கட்டமைக்கிறார்கள். பட்டாம்பூச்சி விளைவு போல இது எங்கெங்கும் பரவுகிறது. அமெரிக்கக் கோயில் சுவர்களில், 'இந்தியர்களே திரும்பிப் போங்கள்' என்று வாசகம் எழுதுகிறவர்களையும், தென்னாபிரிக்காவில் இந்தியர்களைத் தாக்குபவர்களையும் இந்த வெறுப்புப் பிரசாரமே இணைக்கிறது.

இந்த 20 ஆண்டுகளில், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட ஒரு போர்க்களம் போல உலகை மாற்றியது 9/11 தாக்குதல். கால எந்திரம் கிடைத்தால், எல்லோருமே அந்தத் திகதிக்கு முன்னால் போக விரும்பக்கூடும். ■

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I
ஆசிரியர் : கே.பாலகஜன் நேரம் : 2 மணித்தியாலங்கள்

**12)** **LKAS-02** இற்கமைய **2021.03.31** இல் **முடிவடைந்த காலப்பகுதிக்கான** இப்பொருட்களின் **விற்பனை வருமானத்திற்கெதிரான இருப்புக்கள் தொடர்பான மொத்தச் செலவீனம் (ரூபா.000)**

1. ரூபா.187700  2. ரூபா.177700  3. ரூபா.177800
4. ரூபா.210500  5. ரூபா.177000

(…………)

**13)** **கவிதா PLC** உற்பத்தி நிறுவனம் **31.03.2021** இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உற்பத்திக்கிரயத்தினைப் பின்வருமாறு கணித்துள்ளது.

| | (ரூபா000) |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 2500 |
| பிறநேர்க்கிரயம் | 680 |
| மேந்தலைகள் | 420 |
| | 3600 |
| மூலப்பொருள்அதிகரிப்பு | (120) |
| குறைவேலை இருப்பில் குறைவு | 60 |
| முடிவுப்பொருள் இருப்பில் அதிகரிப்பு | (140) |
| **மொத்த உற்பத்திக் கிரயம்** | 3400 |

**பின்வரும் மேலதிக தகவல்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை**

1. மூலப்பொருட்களில் ரூபா.160000 பெறுமதியானவை உரிமையாளரினால் **சொந்தத் தேவைக்காக** பெற்றுக்கொள்ளப்பட்டது.
2. இயந்திரத்திற்கான பெறுமானத்தேய்வு ரூபா.300000 **ஏடுகளில் பதியப்படவில்லை.**
3. மேந்தலைகளில் ரூபா.140000 **உற்பத்தியல்லா மேந்தலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.**
4. குறைவேலை இறுதி இருப்பின் பெறுமதி ரூபா.20000 இனால் **குறைவாகப் பதியப்பட்டுள்ளது.**

**மேலுள்ள தகவல்களை கருத்திற் கொள்வதற்கு முன்னுள்ள உற்பத்திக்கிரயம், சரியான உற்பத்திக்கிரயம் மற்றும் விற்பனைக் கிரயத்தினையும் முறையே காட்டுவது.(ரூபா 000)**

1. ரூபா.3540, ரூபா.3400, ரூபா.3380
2. ரூபா.3640, ரூபா.3520, ரூபா.3540
3. ரூபா.3540, ரூபா.3520, ரூபா.3380
4. ரூபா.3400, ரூபா.3600, ரூபா.3560
5. ரூபா.3800, ரூபா.4200, ரூபா.3380

(…………)

**14)** **SKB மகளிர்** நலன்புரிச் சங்கமொன்றின் **2020.04.01** இல் உள்ளவாறான **உரிமையாண்மை மீதிகள் பின்வருமாறு:**

| | |
|---|---|
| திரண்டநிதியம் | ரூபா. 360000 |
| கட்டிடநிதியம்(விசேடம்) | ரூபா.1400000 |
| ஆயுள் அங்கத்துவக் கட்டணம்(மீதி) | ரூபா. 60000 |

**2021.03.31** இல் முடிவடையும் காலப்பகுதிகளில் **கட்டிடநிதியினைப் பயன்படுத்தி** ரூபா.60000 இற்கு கட்டிடத்திற்கான **விரிவாக்கம்** மேற்கொள்ளப்பட்டதுடன் ஆயுள் அங்கத்துவக் கட்டணத்திலிருந்து ரூபா.20000 இனை **வருமானச் செலவீட்டுக்கணக்கிற்கு** மாற்றப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் **2021.03.31** இல் முடிவடையும் காலப்பகுதிக்கான வருமான மிகை ரூபா.40000 ஆகும். மேற்குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் **2021.03.31** இல் திரண்டநிதியம் மற்றும் நலன்புரிச் சங்கத்தின் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றமும் முறையே

1. ரூபா.400000, ரூபா.40000 இனால் குறைவடையும்.
2. ரூபா.360000, ரூபா.40000 இனால் குறைவடையும்.
3. ரூபா.480000, ரூபா.80000 இனால் குறைவடையும்.
4. ரூபா.540000, ரூபா.40000 இனால் அதிகரிக்கும்.
5. ரூபா.540000, ரூபா.60000 இனால் அதிகரிக்கும்.

(…………)

**15)** **பங்குடமை இறுதிக்கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது?**

1. பங்குடமையின் உரிமைத்துவம் மாற்றமடைகின்ற போது **நன்மதிப்பானது மதிப்பிடப்பட்டு சீராக்கப்படும்.**
2. பங்குடமையின் ஒப்பந்தத்தில் சம்பளத்திற்கான ஏற்பாடுகள் காணப்படுமாயின் பங்காளருக்கான **சம்பளங்கள் வழங்கப்படும்.**
3. பங்காளர்களின் பற்றுக்கள் பங்குடமையின் இலபாநட்டப் பகிர்வின் போது **கழிக்கப்படுவதில்லை.**
4. பங்குடமை **ஒப்பந்தப்படி** இலாபநட்டங்கள் பங்காளர்களிடையே **பகிரப்படும்.**
5. பங்குடமைக்குப் பங்காளரால் கொடுக்கப்படும் **கடனுக்கான வட்டியானது** பங்குடமையின் **செலவீனமாக இனங்காணப்படுவதில்லை.**

(…………)

- **16,17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

**சஜித்தா, டெப்னியா** பங்குடமையின் நடைமுறைக்கணக்கானது **31.03.2021** இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு பின்வருமாறு காணப்பட்டது.

**(ரூபா 000)**

| | சஜித்தா | டெப்னியா | | சஜித்தா | டெப்னியா |
|---|---|---|---|---|---|
| பற்றுக்கள் | 200 | 400 | மீதி வந்தது | 240 | 260 |
| செலுத்திய சம்பளம் | 80 | 120 | மூலதன வட்டி | 340 | 300 |
| | | | சம்பளம் | 360 | 480 |
| | | | இலாபம் | 400 | 300 |
| மீதி சென்றது | 1160 | 1020 | கடன் வட்டி | 100 | 200 |
| | 1440 | 1540 | | 1440 | 1540 |
| | | | மீதி வந்தது | 1160 | 1020 |

## மனைவியை வெட்டிக்கொலை செய்துவிட்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டார் கணவன்

கொழும்பு, செப். 11

கொழும்பு, கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட பாத பிரதேசத்தில் நபர் ஒருவர் தனது மனைவியைக் கழுத்தை வெட்டிக் கொலை செய்த பின்னர் தானும் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பட்டு வந்தர, மடபாத பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபர் மனைவியைக் கொலை செய்துவிட்டு தானும் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

குடும்பச் சண்டையே இதற் குக் காரணம் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கெஸ்பேவ பொலிஸார் மேல திக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

## கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் துரோகங்களை அரங்கேற்றும் அரசு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.11

**“கொரோனா பெருந்தொற்று நெருக்கடி நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையிலான மிக மோசமான சட்டமூலங்களை தற்போதைய அரசு நிறைவேற்றி வருகின்றது.”**

- இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனா பெருந்தொற்று நிலையால் நாட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய நேரத்தில் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தடுப்பூசி திட்டம்கூட தாமதமாகவே ஆரம்பமாகியது. தாமதித்தேனும் இந்த நடவடிக்கை ஆரம்பமானதை வரவேற்கின்றோம். ஆனால், தடுப்பூசி திட்டத்தில் இன்றளவிலும் குளறுபடி தொடர்கின்றது. இதனால்தான் விசேட மருத்துவர் ஒருவர்கூட தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகியுள்ளார்.

தடுப்பூசித் திட்டத்தின் போது சுகாதாரத்துறையினருக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றே பரிந்துரைக்கப்பட்டிருந்தது. குறித்த பரிந்துரையைப் புறந்தள்ளிவிட்டு தடுப்பூசி விடயத்தில் அரசியல் தீர்மானமே எடுக்கப்பட்டது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோனமைக்கு இந்த நிலைமையே காரணம். ஏனெனில், கொரோனா மரணங்களில் 80 முதல் 90 வீதம் வரை 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

அதேவேளை, நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையிலான சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கறுப்புப்பணத்தைச் சட்டபூர்வமாக்குவதற்கான சட்டமூலம்கூட நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது கொரோனா நெருக்கடியைக் கூட தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களுக்குத் துரோகமிழைக்கும் செயல்பாடுகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது”

- என்றார். (இ)

## காட்டுக்குள் காணாமல்போன 25 வயது யுவதி கண்டுபிடிப்பு

பூண்டுலோயா, செப். 11

பூண்டுலோயா - டன்சினன் வனப்பகுதியில் விறகு வெட்டச் சென்று காணாமல்போன யுவதி கண்டுபிடிக்கபட்டுள்ளார்.

25 வயதுடைய குறித்த யுவதி டன்சினன் வனப்பகுதியில் தனது தாயுடன் கடந்த 5ஆம் திகதி விறகு வெட்டச் சென்றவேளை காணாமல் போயிருந்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த யுவதியைத் தேடும் பணிகள் ஐந்தாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவர் கண்டுபிடிக் கப்பட்டுள்ளார். (இ)

## பிரதமர் இத்தாலி பயணமானார்



கொழும்பு, செப். 11

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

இந்த விஜயத்தின்போது பிரதமர், “ஜி 20 சர்வமத மற்றும் கலாசார மாநாடு - 2021” இன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரை ஆற்றவுள்ளவுடன், இராஜதந்திர சந்திப்புகளிலும் கலந்து கொள்ளவுள்ளார். வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட தூதுக் குழுவினர் பிரதமருடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர். (இ)

## சர்வதேச விசாரணை கோரி ஜெனிவாவுக்கு புலம்பெயர் தமிழர்கள் சைக்கிள் பயணம்




இலண்டன், செப். 11

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான சர்வதேச விசாரணை கோரி, புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக, பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், லண்டனில் இருந்து ஜெனிவா வரை சைக்கிளில் பயணிக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 2ஆம் திகதி பிரிட்டன் பிரதமர் இல்லத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சைக்கிள் பயண போராட்டம், ஐரோப்பிய நாடுகள் ஊடாக, எதிர்வரும் 20ஆம் திகதி ஜெனிவாவைச் சென்றடையவுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஒரு வடிவமாக நெதர்லாந்து தமிழ் பேரவையின் ஏற்பாட்டில், நெதர்லாந்தின் டென் ஹாக் நகரில் அமைந்துள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள், சர்வதேச விசாரணை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி கோஷமிட்டனர்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத் தொடர்களில் இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு எட்டப்படும் என்று வெளிவிவகார அமைச் சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவர் மாட்டினார்

கேகாலை, செப். 11

கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேகாலை நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றுடனும், 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கிரவைகள் ஒன் பதுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 68,649 பேர் இதுவரை கைது

கொழும்பு, செப். 11

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 670 பேர் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் 43 வாகனங்கள் பறிமுதல் செய் யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 68 ஆயிரத்து 649 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளைமீறி மேல் மாகாணத்துக்குள் உட்பிரவேசிக்க மற்றும் வெளியேற முற்பட்ட 184 வாகனங்களில் வந்த 238 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று முன்தினம் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 1414 வாகனங்களில் வந்த 2 ஆயிரத்து 41 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் பெண்ணொருவர் மரணம்!

குருநாகல், செப். 11

குருநாகல் மாவட்டம், கொட்டவெஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்கினிமிட்டிய - பலுகொல்ல காட்டுக்குள் உட்பிரவேசித்த பெண்ணொருவர், கட்டுத்துவக்கு வெடித்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பலுகத்தேவ நவகத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பெண் கறிவேப்பிலை பறிப்பதற்காக மற்றுமொரு பெண்ணுடன் குறித்த காட்டுப்பகுதிக்குள் சென்றுள்ள நிலையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண்ணை உடனடியாக கல்கமுவ வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



## சர்வதேச நாடுகளின் 113 பயணிகள் ஆப்கானிலிருந்து வெளியேறினர்!

டோகா, செப். 11

அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய பின்னர் முதல் சர்வதேச விமானம் காபூல் விமான நிலையத்தில் இருந்து சர்வதேச நாடுகளை சேர்ந்த 113 பேருடன் நேற்றுமுன்தினம் புறப்பட்டது.

கட்டார் எயார்வேஸ் விசேட விமானம் காபூலில் இருந்து பயணிகளுடன் புறப்பட்டு நேற்றுமுன்தினம் கட்டார் தலைநகர் டோகாவில் தரையிறங்கியது.

இதேநேரம் காபூலில் இருந்து வெளிநாட்டவர்கள் உட்பட மற்றொரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு இரண்டாவது விமானமும் நேற்று புறப்பட்டது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன் சமீபத்தில் கட்டார் சென்றிருந்த போது காபூலில் சிக்கியுள்ளவர்களை வெளியேற்ற உதவுமாறு அந்த நாட்டிடம் கோரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த வெளியேற்றம் நிகழ்ந்துள்ளது.

இந்த விமானத்தில் 13 பிரிட்டிஷ் பிரஜைகள் காபூலில் இருந்து கட்டார் வந்தடைந்தனர் என்று அந்நாட்டு வெளியுறவு செயலாளர் டொமினிக் ராப் தெரிவித்தார். இவர்களை வெளியேற்ற உதவியதற்காக கட்டாருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இந்த விமானத்தில் தங்கள் நாட்டு பிரஜைகள் 43 பேர் இருந்தனர் என்று கனடா அரசு உறுதி செய்தது. இதேபோல, நெதர்லாந்து, தனது பிரஜைகள் 13 பேர் வெளியேறினர் என்று குறிப்பிட்டுள்ளது.

## தியனன்மென் படுகொலை நினைவு அருங்காட்சியகத்தில் சோதனை!



ஹொங்கொங், செப். 11

தியனன்மென் அடக்குமுறையை நினைவுகூரும் விதமாக ஹொங் கொங்கில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகம் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சோதனையிடப்பட்டது.

அருங்காட்சியகத்திலிருந்து பொருட்களை அதிகாரிகள் கொண்டு சென்றமையை மக்கள் அவதானித்தனர். இதேசமயம் அருங்காட்சியகத்தை நடத்தும் உறுப்பினர்கள் நால்வர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில், ஜனநாயக சார்பு ஆர்வலரான பரிஸ்டர் சோ ஹாங் தங் உள்ளார்.

இவர்கள் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான குற்றங்கள் நிரூபணமானால் அதிகபட்சமாக அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

தியனன்மன் சதுக்க படுகொலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக வருடாந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களை வெளிநாட்டு முகவர்கள் என்று சீனா குற்றஞ்சாட்டியது. இந்த நிலையில் நினைவேந்தலை நடத்த முடியாதவாறு கடந்த ஜூன் மாதம் இந்த அருங்காட்சியகம் மூடப்பட்டது. இந்த நிலையிலேயே நேற்று தேசிய பாதுகாப்பு பிரிவால் அருங்காட்சியகம் சோதனையிடப்பட்டது.

இதன்போது, அவர்கள் அங்கிருந்த பொருட்களை எடுத்துச் சென்றனர். இதேவேளை கைதான உறுப்பினர்களிடம் அருங்காட்சியகம் தொடர்பான நிதி பதிவுகள் முதல் அனைத்து உறுப்பினர்களின் விவரங்களையும் ஒப்படைக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை இதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு சீன தலைநகர் பீஜிங்கில் தியனன்மென் சதுக்கத்தில் அரசுக்கு எதிராக போராடிய மாணவர்களை கம்யூனிஸ்ட் அரசு கொடூரமாக அடக்கியது. இதன் போது சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குழந்தைகளை பெறவே பெண்கள் அரசாங்கத்தில் இடம் அவசியமற்றது

### தலிபான்கள் அமைப்பு கருத்து

காபூல், செப். 11


பெண்கள் குழந்தைகளை பெற்றெடுக்க மட்டுமே வேண்டும். அமைச்சரவையில் அவர்களுக்கு இடமளிப்பது அவசியமற்றது என்று தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் புதிய அமைச்சரவையில் பெண்களுக்கு இடமளிக்காதது தொடர்பில் தலிபான்களின் செய்தி தொடர்பாளர் சையத் ஜெக்ருல்லா ஹாஷிமி நேர்காணல் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "பெண்களால் அமைச்சராக முடியாது. சுமக்க முடியாததை அவர்களின் கழுத்தில் ஏற்றுவது போலிருக்கும். அமைச்சரவையில் பெண்களுக்கு இடமளிப்பது அவசியமற்றது. அவர்கள் குழந்தைகளை பெற்றெடுக்க மட்டுமே வேண்டும். போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள அனைத்து பெண்களுக்கும் பிரதிநிதிகளாக இருக்க முடியாது" என டோலோ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சையத் ஜெக்ருல்லா ஹாஷிமி தெரிவித்துள்ளார்.

ஆனால், சமூகத்தில் 50 சதவீதத்தினர் பெண்களாக உள்ளனரே என நேர்காணல் எடுத்தவர் எழுப்பிய கேள்விக்கு, "நாங்கள் அவர்களை பாதியாகவே கருதவில்லை. இந்த பாதி என்ற கருத்து தவறாக திரித்துக் கூறப்பட்டுள்ளது. அமைச்சரவையில் இடம்கொடுத்துவிட்டால் மட்டும் போதுமா? அதற்கு மேல் செய்ய வேண்டாமா? அவர்களின் உரிமைகளை பறிப்பது பிரச்னை இல்லையா? கடந்த 20 ஆண்டுகளாக, ஊடகம், அமெரிக்கா, பொம்மை அரசாங்கம் ஆகியவை சொன்னது செய்தது யாவும் பாலியல் தொழிலே" என்றார்.

அனைத்து பெண்களையும் பாலியல் தொழில் செய்பவர்களாக குற்றம்சாட்டமுடியாதே என செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு, "அனைத்து பெண்களையும் சொல்லவில்லை. தெருக்களில் போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து பெண்களுக்கு பிரிதிநிதிகள் இல்லை" என்றார். (ஐ)



## அமெரிக்க - சீன தலைவர்கள் தொலைபேசி வழியே பேச்சு!

வாஷிங்டன், செப். 11

உலகின் இரு பெரும் வல்லரசுகளின் தலைவர்களான சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் ஆகியோர் ஏழு மாதங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர்.

ஜனாதிபதி ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் இரு தலைவர்களுக்கும் இடையே நடந்த இரண்டாவது உரையாடல் இதுவாகும். வர்த்தகம், உளவு மற்றும் தொற்றுநோய் போன்ற பிரச்னைகளால் அமெரிக்கா - சீனா இடையில் தொடரும் பனிப்போரின் மத்தியில் இந்தப் பேச்சு இடம்பெற்றுள்ளது.

சுமார் 90 நிமிடங்கள் நீடித்த உரையாடலில், கொரோனா தொற்றைக் கையாளுதல், பாதுகாப்பு மீறல்கள், வர்த்தகப் போர் குறித்து விவாதிக்கப்பட்டன என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இரு நாடுகளும், தங்களுக்கு இடையேயான போட்டியை வரவேற்கிறோம். ஆனால், இந்தப் போட்டி மோதலாக மாற விரும்பவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஜி ஜின்பிங்கின் கூற்றுப்படி, அமெரிக்காவின் நடவடிக்கைகள் சீனாவால் தவறாகப் புரிந்துகொள்ளப் படவில்லை என்று கூறப்பட்டது. ஜோ பைடன் தொடக்கத்திலிருந்தே சீனா மீது அதிக கவனம் செலுத்திவருகிறார். அவர் பசுபிக் நட்பு நாடுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்த விரும்புகிறார். அமெரிக்கா, சீனா நாடுகளின் உலகளாவிய வர்த்தகத்தையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகிறார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சீனா தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களால் இரு நாடுகளிடையேயும் முரண்பாடுகள் பெரிதாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அடுத்த 15 ஆண்டுகளில் உலகுக்கு அதிக நன்மை

### பிரிக்ஸ் அமைப்பு உறுதி

புதுடில்லி, செப். 11

அடுத்த 15 வருடங்களில் உலகத்துக்கு அதிக நன்மைகளை செய்வதை "பிரிக்ஸ்" அமைப்பு உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய 5 நாடுகள் இணைந்து "பிரிக்ஸ்" கூட்டமைப்பை உருவாக்கின. இந்த அமைப்பின் 13ஆவது உச்சி மாநாடு மெய்நிகர் வழியே நேற்றுமுன்தினம் நடந்தது. இந்த ஆண்டு இந்தக் கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்தது. அமைப்பில் அங்கம் வகித்த அனைத்து நாடுகளின் தலைவர்களும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தலைமை உரையாற்றிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி,

கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு சாதனைகளை பிரிக்ஸ் தளம் சந்தித்துள்ளது. உலகின் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கான சக்தி மிகுந்த குரலாக இன்றைக்கு நாம் இருக்கிறோம். வளர்ந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகள் மீது கவனம் செலுத்துவதற்கும் பயனுள்ளதாக இந்த தளம் விளங்குகிறது.



புதிய வளர்ச்சி வங்கி, எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்வு களுக்கான முன்னேற்பாடு மற்றும் எரிசக்தி ஆராய்ச்சி ஒத்துழைப்பு தளம் உள்ளிட்ட வலுவான அமைப்புகளை பிரிக்ஸ் உருவாக்கி உள்ளது. இவை அனைத்தும் மிகவும் வலுவான அமைப்புகள். நாம் பெருமைப்பட நிறைய இருக்கிறது என்பதில் சந்தேகம் ஏதுவுமில்லை. அதே சமயம், நாம் மிகவும் சுய-திருப்தி அடைந்துவிடாமல், இன்னும் அதிக நன்மைகளை அடுத்த 15 வருடங்களில் பிரிக்ஸ் உருவாக்குவதை நாம் உறுதி செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி இரத்து!

லண்டன், செப். 11

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டி இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - இந்திய கிரிக்கெட் சபைகள் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

இந்திய அணி இங்கிலாந்தில் 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. இதில், 2-1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் இருக்கிறது.

இந்த நிலையில், இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி, பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் பரத் அருண், களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர் ஸ்ரீதர் ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்தநிலையில் இந்திய வீரர்களுக்கு நடத்தப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், நேற்றைய தினம் போட்டியில் களமிறங்க அவர்கள் விரும்பவில்லை.

இதையடுத்து இரு கிரிக்கெட் சபைகளும் இணைந்து போட்டியை இடைநிறுத்துவது என்று அறிவித்தன. இந்தப் போட்டி எப்போது நடக்கும் என்று அறிவிக்கப்படவில்லை. (ஐ)



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்: எம்மா ரடுசனு, லேலா இறுதியாட்டத்தில்!




நியூயோர்க், செப். 11

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸின் இறுதியாட்டத்தில் பிரிட்டிஷின் எம்மா ரடுசனு, கனடாவின் லேலா பெர்னாண்டஸ் ஆகியோர் இறுதி யாட்டத்துக்கு முன்னேறினர்.

நியோர்க்கில் நேற்று முன்தினம் இரவு நடந்த அமெரிக்க ஓப்பன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரை யிறுதிப் போட்டியில் கீரிஸின் மரியா சக்கரியை எதிர்கொண்டார் எம்மா ரடுசனு.

இந்த ஆட்டத்தில் எம்மா ரடுசனு, 6-1 6-4 என்ற கணக்கில் மரியா சக்கரியை தோற்கடித்து இறுதியாட்டத்துக்கு முன்னே றினார்.

44 ஆண்டுகளின் பின்னர் பெரிய தொடரின் இறுதிப் போட் டிக்கு தகுதி பெற்ற முதல் பிரிட் டிஷ் பெண் இவராவார்.

இதேவேளை, மற்றோர் அரை யிறுதி ஆட்டத்தில் கனடிய இளம்வீராங்கனையான லேலா பெர்னாண்டஸ் மற்றும் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங் காவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் 19 வயதான லேலா பெர்னாண்டஸ் 7-6 (7-3) 4-6 6-4 என்ற கணக்கில் அரினா சபலெங்காவை தோற்கடித்து இறு திப் போட்டிக்கு முன்னே றினார்.

இன்று சனிக்கிழமை நடக்கும் இறுதியாட்டத்தில் எம்மா ரடுசனு - லேலா பெர்னாண்டஸ் மோதவுள் ளனர். (ஐ)

# மெஸ்ஸி ஹட்ரிக் கோல் ஆர்ஜென்ரீனா வெற்றி!

புவனஸ்அயர்ஸ், செப். 11

மெஸ்ஸி அடித்த ஹட்ரிக் கோல்கள் மூலம் பொலி வியாவை வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா. அத்துடன், பீலேயின் சாதனையையும் மெஸ்ஸி தகர்த்தார்.

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந் தாட்டத்திற்கான தகுதிகாண் போட்டி நடக்கிறது. பிரேசிலுக்கு எதிரான போட்டி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப் போட்டி நேற்று ஆர்ஜென்ரீனாவின் புவனஸ்அயர்ஸில் நடந்தது.

இது மெஸ்ஸியின் 153ஆவது போட்டியாக அமைந்தது. இதில், 3 கோல்களை போட்டதன் மூலம் 79 சர்வதேச கோல்கள் அடித்தார்.

பிரேஸில் உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே 92 போட்டிகளில் 77 சர்வதேச கோல்களை அடித்திருந் தார். இந்த சாதனையையே மெஸ்ஸி தற்போது முறியடித்துள்ளார்.

போட்டி முடிவடைந்த பின்னர், மெஸ்ஸி கோபா அமெரிக்க கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரசிகர்களின் முன்பாகக் கொண்டாடினார். (ஐ)



# தென்னாபிரிக்காவுக்கு செல்கிறது இந்திய அணி

ஜொகன்னர்ஸ்பேர்க், செப். 09

டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி, தென்னாபிரிக்கா செல்லவுள்ளது.

இருபது -20 உலகக் கிண்ணத் தொடர் முடி வடைந்ததும், வரும் டிசம்பர் மாதம் இந்திய அணி தென்னாபிரிக்கா செல்லும். அங்கு, 3 டெஸ்ட், 3 ஒருநாள், 4 இருபது - 20 தொடர்களில் இந்திய அணி பங்கேற்கிறது.

இதற்கான அட்டவணையை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

முதல் டெஸ்ட், வரும் டிச. 17-21ல் ஜொகன்னர் பேர்க் நகரில் நடக்கவுள்ளது. 'பொக்சிங்டே' டெஸ்ட் வரும் டிச. 26இல் செஞ்சூரியனில் தொடங்குகிறது. மூன்றாவது டெஸ்ட், மீண்டும் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் (ஜன. 3 -7) நடக்கவுள்ளது.



மூன்று ஒருநாள் போட்டிகள் முறையே ஜன. 11, ஜன. 14 ஜன. 16இல் நடக்கவுள்ளன. முதலிரு இருபது - 20 போட்டிகளும் (ஜன. 19, 21) கேப்டவுனிலும், கடைசி இரு பேர்லிலும் (ஜன. 23, 26) நடக்கவுள்ளன. (ஐ)

# உலகக்கிண்ண இருபது -20 மேற்கிந்தியத்தீவுகள் அணி!

ஜமைக்கா, செப். 11

எதிர்வரும் ஒக்ரோபரில் ஆரம்ப மாகவுள்ள 2021 ஐ. சி. சி. இருபது - 20 உலகக் கிண்ணத்துக் கான 15 பேர் கொண்ட அணியை மேற்கிந்தி யத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டது.

இந்த அணியில் பிராத்வைட் இடம்பெறவில்லை. 36 வயதான ராம்பல் ஆறு வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாக அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார். இதே போன்று ரோஸ்டன் சேஸூம் அணிக்கு திரும்பியுள்ளார்.

அணி விவரம்:

கிரன் பொலார்ட் (தலைவர்), நிக்கோலஸ் பூரண் (உப தலைவர்), பேபியன் அலன், டுவைன் பிராவோ, ரோஸ்டன் சேஸ், அந்த்ரே பிளெட் சர், கிறிஸ் கெய்ல், ஷிம்ரன் ஹெட் மியர், எவின் லூயிஸ், ஒபேட் மெக்காய், லென்டல் சிம்மன்ஸ், ரவி ராம்பல், அந்த்ரே ரசல், ஓஷேன் தாமஸ் மற்றும் ஹேடன் வோல்ஷ்.

இதேவேளை, மேலதிக வீரர்கள் டேரன் பிராவோ, ஷெல்டன் கோட்ரெல், ஜேசன் ஹோல்டர், அகில் ஹொாசைன் ஆகியோர் சேர்க்கப் பட்டுள்ளனர். (ஐ)



# மனிதாபிமான ரீதியில் செயல்படும்போது சட்டவிதிமுறைகளுக்கும் மதிப்பளியுங்கள்

## யாழ். மக்களிடம் பொலிஸ் பேச்சாளர் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், செப்.11

**"நாட்டின் தற்போதைய நெருக்கடிமிக்க சூழலில் மனிதாபிமானச் செயல்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலையும் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டியது அவசியம்."**

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட மக்களிடம் கேட்டுக் கொண்டார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியச்சர் நிஹால் தல்துவ.

"டான்" செய்தி சேவைக்கு வழங்கிய பிரத்தியேகக் குரல் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நபர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்ததையடுத்து அவரது மரண வீட்டுக்கு அதிகளவானோர் சென்றிருந்தனர்.

குறித்த நபரின் திடீர் மரணம் உளவியல் ரீதியிலான தாக்கத்தை அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. சிறந்த முறையில் வாழ்ந்து மரணித்தவராக அவர் அந்தப் பிரதேசத்தில் மதிக்கப்படுகின்றார்.

பிரதேச மக்களுடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளார். இதன் காரணமாகவே அவரது மரண வீட்டுக்கு அதிகளவானோர் சென்றுள்ளனர் என்பது பொலிஸ் தரப்பு கருத்தாக உள்ளது.

குறித்த நபருக்கு நாமும் கௌரவமளிக்க வேண்டும். அதேபோன்று மற்றுமொரு சம்பவம் பதிவாகியிருந்தது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நபர் ஒருவர் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிமிக்க சூழலைக் கருத்தில்கொண்டு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதியுதவி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

இது உண்மையில் மனிதாபிமான ரீதியான செயல்பாடு. ஏனெனில், சமூகசேவகர் என்ற ரீதியில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் உதவுவதற்காக முன்னின்று அவர் செயல்பட்டுள்ளார். எனவே, அவருக்கு நாம் கௌரவமளிக்க வேண்டும்.

இவ்விரு சந்தர்ப்பங்களுக்கும் முதலில் நாம் மதிப்பளிக்க வேண்டும். எனினும், நாம் புரிந்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் உள்ளது.

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்றும் மிகவும் பயங்கரமான நோய்த்தொற்று மக்கள் மத்தியில் பரவி வருகின்றது.

நோய்த்தொற்றுக் காவிகளாக மக்களே உள்ளனர். எனவே, இந்தத் தொற்றானது ஒருவரிடமிருந்து மற்றுமொருவருக்குப் பரவக்கூடும்.

அதேபோன்று ஒருவருக்குத் தொற்றுப் பரவினால் அவரது குடும்பத்தினர், அயலவர்கள் உள்ளிட்ட அனைவரும் பாதிப்பை எதிர்கொள்வர்.

எனவே, சமூகத்தில் சிறந்த முறையில் வாழ்ந்து மரணித்த நபருக்கு நாம் கௌரவமளிக்கின்றோம். எனினும், அந்த நபரின் மரணவீட்டில் பங்கேற்பதால் தொற்றுப் பரவல் அதிகரிப்பதுடன் மற்றுமொருவரின் மரணத்துக்கும் அது காரணமாகின்றது. எனவே, இவ்விடயமானது உயிரிழந்த நபரை அவமதிப்பதாக அமைந்துவிடும்.

அதேபோன்று நிதி பகிர்ந்தளிக்கும் விடயத்தை எடுத்துக்கொண்டால் நிதி பகிர்ந்தளிக்கும் நபர் மனிதாபிமான ரீதியில் நடந்துகொண்டாலும் அந்த இடத்தில் நோய்த் தொற்றுப் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வந்தவரினூடாகப் பணத்தைப் பெறுவதற்கு வராத ஒருவர் பாதிக்கப்படக்கூடும்.

இவ்வாறான மனிதாபிமானச் செயல்பாடுகளை முன்னெடுக்கும்போது பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை நடைமுறைப்படுத்த நேர்ந்தால் அது எமக்கும் வருத்தமளிக்கின்றது. எனினும், சட்டஒழுங்கு விதி முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது எமது பொறுப்பு.

எனவே, சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு நாம் மக்களைக் கோருகின்றோம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிச் செயல்படுமாறே நாம் பொது மக்களைக் கோருகின்றோம்" - என்றார். (இ)

# வவுனியாவில் மேலும் 8 பேர் தொற்றால் பலி!

வவுனியா, செப். 11

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மேலும் 8 மரணங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலை யில் வீடுகளில் தனிமைப்படுத் தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 08 பேர் நேற்றுமுன்தினம் மரணமடைந்தனர். இவர்களில் 6 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இந்நிலையில், மரணித்த 8 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின் பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## மக்கள் குடியிருப்புக்குள் யானைகளின் ஊடுருவல்

மட்டக்களப்பு, செங்கலடி நகரை அண்மித்த பிரதேசத்திலுள்ள கறுத்த பாலம் மற்றும் பொது மயானம் ஆகிய பகுதிக்குள் காட்டு யானைகள் ஊடுருவியுள்ளன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் காட்டு யானைகள் நகர பகுதிகளுக்குப் படையெடுத்துள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

செங்கலடி கறுத்தப்பாலத்தை அண்மித்த பற்றைக் காட்டுப் பகுதிக்குள் படையெடுத்த காட்டு யானைக் கூட்டத்தை வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் விரட்டியுள்ளனர். வறட்சியால் காட்டு யானைகள் குடியிருப்புக் களுக்குள் வருவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# தேன் எடுக்க சென்ற குடும்பஸ்தர் கரடியின் தாக்குதலுக்கு இலக்கு!

திருகோணமலை, செப். 11

திருகோணமலை - மொரவெள காட்டுப்பகுதிக்குள் தேன் எடுப்பதற்காகச் சென்ற நபர் ஒருவர் கரடியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு உள்ளானவர் ரொட்டவெள - மிரிஸ்வெள பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆர்.இம்தியாஸ் (வயது 40) எனத் தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து தேன் எடுப்பதற்காக 6 பேரைக் கொண்ட குழுவினர் சென்றனர் எனவும், தேன் தேடுவதற்காக வேறு வேறாகப் பிரிந்து சென்றபோது மரத்துக்கு அருகில் மறைந்திருந்த கரடி குறித்த நபரைத் தாக்கியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த நபரை அவருடன் சென்ற குழுவினர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அதன் பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கரடியின் தாக்குதலால் குறித்த நபரின் கை மற்றும் முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. (இ)

# 'சீல்' வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையை திறந்து சீனி விற்பனை செய்த மூவர் கைது!

கொழும்பு, செப். 11

கடவத்தை பிரதேசத்தில், நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்ட களஞ்சியசாலையை சட்டவிரோதமாகத் திறந்து சீனியை விற்பனை செய்த மூவரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

குறித்த களஞ்சியசாலையில் பணியாற்றிவரும் பணியாளர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 10 இலட்சத்து 530 ரூபாய் பெறுமதியான சீனியையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

பரக்கந்தெனிய - இம்புல்கொட, எலக்கந்த - வத்தளை, வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34, 32, 27 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபையின் கம்பஹா பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரஞ்சித் தலைமையிலான குழுவினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 26 வெலிக்கடை எந்தேரமுல்லை பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையை திறந்தே சீனி விற்பனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 4 ஆயிரத்து 100 தொன் சீனிகளையும், லொறி ஒன்றையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் கடவத்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (இ)

# ஓகஸ்ட்டில் 5,040 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கொரோனாவுக்கு மத்தியிலும் இலங்கை வருகை

கொழும்பு, செப். 11

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டின் சுற்றுலாத்துறைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆயிரத்து 40 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடந்த மாதமே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதத்தில் 1,497 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், ஜூன் மாதத்தில் 1,614 சுற்றுலாப் பயணிகளும், ஜூலை மாதம் 2 ஆயிரத்து 429 தொற்றாளர்களும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24 ஆயிரத்து 377 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

எனினும், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

கடந்த மாதம் கனடாவிலிருந்தே அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, பிரிட்டன், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கில், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட சுற்றுலாப் பயணிகள், ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். (இ)

## புலிகளின்...

பிரசாரம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தமிழ் அரசுக்கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சிரேஷ்ட பிரதித் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சுமந்திரன்,

தமிழ் அரசுக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பிலான உண்மைத் தன்மை தொடர்பில் எமக்குத் தெரியாது.

அதில் கையொப்பமிட்டவர்களாக சொல்லப்பட்ட உறுப்பினர்கள் தாம் அவ்வாறு கையொப்பமிடவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

எனவே, அவ்வாறு அவர்களின் கையொப்பங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

கடந்த 2012-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன் பேச்சு நடத்தி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றது. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக கிடைத்தது. அது அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆனால், தற்போது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு விசமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்கக் கோரி சம்பந்தனால் ஓர் ஆவணம் அனுப்பப்பட்டதாக கூறப்படுகின்றது. அது முற்றிலும் ஒரு பொய்யான விடயம். இந்த விடயத்தில் ஊடகங்களும் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். அதாவது ஒரு விடயத்தை செய்தியாக பிரசுரிக்கும்போது அதனை ஆராய்ந்த பின் செய்தியாக பிரசுரிக்க வேண்டும். அத்தோடு தமிழ் அரசுக்கட்சி தனியாகச் செயல்படப்போகின்றது, கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறது என தற்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறாது. எந்த காலத்திலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்துச் செயற்படுவதற்கு தயாராக இல்லை.

அதேபோல் எந்தளவுக்கு இணைந்து செயல்பட முடியுமோ அந்தளவுக்கு இணைந்து செயல்படுகின்றோம். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எம்முடன் நல்ல உறவாக உள்ளன. அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயல்படுகின்றோம் எனக் கூறுகின்றார்கள்.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமையாகச் செயல்படுகின்றோம். எனினும் கூட்டாகச் ஏற்படும்போது பல பிரச்னைகள், முரண்பாடுகள் ஏற்படும். ஆனால், தமிழ் மக்களுக்காக பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயல்படவில்லை-என்றார்.

## யாழில் ஒரு...

ஒரு வயதான குழந்தை காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளது.

அதன் பின்னர் மேற்கொள் ளப்பட்ட பரிசோதனையில் குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஐ.நா.கூட்ட...

யின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் முதல் சந்தர்ப்பமும் நாடு கடந்து, சர்வதேச கூட்டத்தொடரொன்றில் பங்கேற்கும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி பொருளாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் பல நாடுகளின் அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேசவுள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

தன்னுடைய தனிப்பட்ட கொள்கை மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தளவு தொகையினருடன் இந்த விஜயத்தை மேற்கொள்ளஇ ஜனாதிபதி அவர்கள் தீர்மானித்துள்ளார்.

அதன்படி அண்மைக்கால வரலாற்றில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரொன்றில் உள்நாட்டில் இருந்து குறைந்தளவு தொகையினர் கலந்துகொள்வது இதுவென்பதுடன் அயோமா ராஜபக்ஷ அம்மையார், தனது சொந்தச் செலவில் இந்த விஜயத்தில் கலந்துகொள்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாங்கள்...

றம் சுமத்தியுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளரால் உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் தொடர்பில் சங்கச் செயலாளர் மஹிந்த ஜயசிங்ஹ நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

அந்தத் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்படாவிட்டால், அதற்கான பொறுப்பை அதிபர்கள் ஏற்கவேண்டும் என்று அந்தக் கடிதம் எச்சரிக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பல கோரிக்கைகளுக்கு அரசு பதில் அளிக்க தவறிவிட்டது. கல்வி அமைச்சர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் மிரட்டினாலும் தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர தயாராக இல்லை என்று மஹிந்த ஜெயசிங்ஹ தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் பாடசாலைகள் இன்னும் மூடப்பட்டிருக்கும் சூழலில், வேலைநிறுத்தத்தை நிறுத்த அமைச்சர் அதிகாரங்களைப் பயன்படுத்துவதை தொழிற்சங்கங்கள் கண்டிக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திருமணத்தில்...

கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணபட்டுள்ளனர் என சுகாதாரத் தரப்பினர் உறுதிப்படுத்தினர்.

காரைநகரைச் சேர்ந்த 81 பேரின் பி.சி.ஆர் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் 34 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 05, 07, 08, 09, 10, 11, 12, 13, 14, 15வயதுடைய 13 சிறார்களும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களை தனிமைப்படுத்தி அவர்களை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த முற்பட்டவேளை வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார உத்தியோகத்தர் உட்பட்டவர்களை தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் 03 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 3,000 பாடசாலைகளை திறக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 11

கிராமப்புறங்களில் உள்ள 100க்கும் குறைந்தளவான மாணவர்கள் எண்ணிக்கையை கொண்ட 3,000 பாடசாலைகளை முதல் கட்டமாக திறப்பது குறித்து கோவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் மெய்நிகர் வழி ஊடாக கோவிட் தடுப் புச் செயலணி கூட்டம் நேற்று நடை பெற்றது.

இதன்போதே பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கிராமப்புறங்களில் உள்ள 100க்கும் குறைந்தளவான மாணவர்கள் எண்ணிக்கையை கொண்ட 3,000 பாடசாலைகளை முதல் கட்டமாக திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கான பொறுப்பை சுகாதார மற்றும் கல்விதுறைசார் அதிகாரிகளைக் கொண்ட தொழிநுட்ப குழு ஒன்றிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

## நாட்டில் மேலும்...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம் வரை 10 ஆயிரத்து 995 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.

இதேவேளை, நாட்டில் நேற்று மேலும் 2 ஆயிரத்து 832 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் நேற்று வரை 4 லட்சத்து 8 ஆயிரத்து 468 பேர் கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது 59 ஆயிரத்து 976 பேர் வைத்தியசாலைகள், கோவிட்-19 இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் மற்றும் வீடுகளில்

மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

## இரட்டை குழந்தை...

மூச்செடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் அன்றைய தினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அன்றைய தினமே அவருக்கு கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பவதிப் பெண்ணுக்கு கடந்த புதன்கிழமை ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

அதன் பின்னர் தாயாருக்கான சிகிச்சைகள் தொடர்ந்த நிலையில் நேற்று முன் தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

## இலங்கையில்...

யாடலின்போதே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பானது கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இலங்கை மக்களுக்காக சினோபார்ம் நிறுவனம் தொடர்ந்து தடுப்பூசி வழங்கி வருவதற்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி வழங்கிய கடிதத்தையும் தூதுவர் இதன்போது சினோபார்ம் நிறுவன தலைவருக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட சினோபார்ம் நிறுவனத் தலைவர், சினோபார்ம் நிறுவனம் இலங்கைக்கு தொடர்ந்து தடுப்பூசிகளை வழங்குமென தெரிவித்தார்.

மேலும் சினோபார்ம் தடுப்பூசியானது 100இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விநியோகிக்கப்படுவதாகவும், 50இற்கும் மேற்பட்ட அரச தலைவர்கள் சினோபார்ம் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்களுக்கு எவ்விதமான பாதகமான விளைவுகளும் இல்லையெனவும் அதன் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## தனிமைப்படுத்தல்...

தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது. இரண்டாம் அலகுத் தடுப்பூசிக்காகத் தேவைப்படும் ஸ்புட்னிக் (Sputnik) தடுப்பூசிகள் ஒரு இலட்சத்து இருபதாயிரம், அடுத்த வாரத்துக்குள் கிடைக்கவுள்ளதாக, கோவிட் ஒழிப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் பெருமளவானோர், 60 வயதுக்கு மேற்பட்டோர் என்றும் இவர்களின் அதிகமானோர், முதல் அலகுத் தடுப்பூசியைக்கூட ஏற்றாதவர்கள் என்றும், சுகாதார அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

அதனால், நடமாடும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வருகை தராத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு, உடனடியாகத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார். அத்துடன், தடுப்பூசி ஏற்றுவதிலிருந்து பின்வாங்கும் நபர்களை, தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் ஊக்குவிக்குமாறும், ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

தங்களுடைய உற்பத்திகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியாமல், மரக்கறி வியாபாரிகள் பெரும் அசௌகரியத்துக்கு ஆளாகி உள்ளனர். அதனால், நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்து வைப்பது தொடர்பிலும், இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையால், சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கான முதல்நிலைக் கல்வியும் அவ்வாறான மாணவர்களுக்கு குழந்தைப் பருவக் கல்வியும் இழக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது.

100 மாணவர்களிலும் குறைவானோர் காணப்படும் 3,000க்கும் அதிகமான பாடசாலைகள், கிராமங்களில் வியாபித்திருக்கின்றன. ஆதனால், அவ்வாறான பாடசாலைகளைத் திறப்பது தொடர்பில் காணப்படும் இயலுமை தொடர்பில் உடனடிப் பரிந்துரைகளை முன்வைக்கும் பொறுப்பு, சுகாதார மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் உள்ளடங்களான தொழில்நுட்பக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல்ல, பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, பவித்ரா வன்னியாரச்சி, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, மஹிந்தானந்த அழுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, ரமேஸ் பதிரண, நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிசிர ஜயகொடி, சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினரான மதுர விதானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன ஆகியோரும் முப்படைத் தளபதிகள், மாகாண மற்றும் பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்கள் ஆகியோரும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஈழநாடு
Eelanadu




# கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசு முனைப்புடன் செயல்படவில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 11

**"கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டுக்குள் ஊடுறுவி ஒன்றறை வருடங்கள் கடந்துள்ளன. இந்தத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவற்கு அரசு முனைப் புடன் செயற்படவில்லை."**

**- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிர தான செயலாளர் டில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.**

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை யளிப்பதற்குத் தேவையான ஒருதொகை பாதுகாப்பு அங்கிகள், ஔடதங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்களை, வெளிநாட்டிலுள்ள நண்பர்களது ஒத்து ழைப்பில் நாட்டிலுள்ள பிரதான வைத்தியசாலைகளுக் குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனவும் அவர் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களிடம் நேற்று கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக் கும் வைத்தியசாலைகளுக்கு குறித்த உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் நாட்களின் குறித்த பொருட்களை வைத் தியசாலைகளுக்குப் பிரித்துக்கொடுப்பதற்கு எதிர்பார்த் துள்ளோம்.

விசேடமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை, ஐ.டி. எச்., கராப்பிட்டிய பொதுவைத்தியசாலை, நாகொடை பொதுவைத்தியசாலை, பதுளை, கண்டி பொது வைத் தியசாலை, கிளிநொச்சி வைத்தியசாலை, இரத்தினபுரி, அனுராதபுரம், குருநாகல் ஆகிய பிரதான வைத்திய சாலைகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டுக்குள் ஊடுறுவி ஒன்றறை வருடங்கள் கடந்துள்ளன. இந்தத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவற்கு அரசு முனைப் புடன் செயற்படவில்லை.

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் அத்தியாவ சிய சுகாதாரத்துறைக்குத் தேவையான சலுகைகள், உப கரணங்கள் பெற்றுக்கொடுப்பதை கைவிட்டுவிட்டு அரசு செயற்படுகின்றது.

அத்தியாவசவிய உபகரணங்கள், ஔடதங்களைப் பெற் றுக்கொடுப்பதற்கும் முறையான செயற்றிட்டங்கள் இல்லை. எனவே, சுகாதாரத் துறையினரும் தொற்றுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது" - என்றார். (இ)

# ஊரடங்கில் பாலியல் தொழில் 4 பெண்கள் உட்பட ஐவர் கைது

கொழும்பு, செப். 11

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், இணையத்தின் ஊடாக விளம்பரப்படுத்தி பாலி யல் தொழிலை முன்னெடுத்து வந்த இடம் கொட்டாவ பகுதியில் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கொட்டாவ பகுதியில் வாரச்சந்தைக்கு அருகில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பாலியல் தொழிலை முன்னெடுத்து வந்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 பெண்களும் மற்றும் அங்கிருந்த ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

# தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி புதைக்கப்பட்ட நபரின் சடலம் தோண்டி எடுப்பு

புத்தளம், செப். 11

தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறி புத்தளம் வெப்ப மடுவ பொதுமயானத்தில் புதைக் கப்பட்ட 56 வயது நபரின் சடலம், புத்தளம் நீதிவான் முன்னிலையில் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப் பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தை யின் சடலமே இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த நபர் கடந்த 4ஆம் திகதி அவரது வீட்டில் மரணமடைந்தார். இதையடுத்து அவரது உடல் தனி மைப்படுத்தல் சட்டவிதிமுறை களை மீறி அன்னைறய தினமே வெப்பமடுவ பொதுமயானத்தில் புதைக்கப்பட்டது.

குறித்த நபர் மரணமடைந்த இரண்டு தினங்களின் பின்னர், அவ ரது மகள் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலை யில் உயிரிழந்தார். அவரது மனைவி யும் உடல்நலக் குறைபாடு காரண மாக வீட்டில் மரணமடைந்த நிலை யில், அவரது சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டது. குறித்த இருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந் தமை பி.சி.ஆர். பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே, தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறும் வகை யில் பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள், பொலிஸாருக்கு அறிவிக் காது புதைக்கப்பட்ட நபர் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்திருக்க லாம் என்று சந்தேகம் நிலவுகின்றது எனப் புத்தளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், புத்தளம் பொலி ஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டையடுத்து புத் தளம் பொலிஸார் இவ்விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றதுடன், சடலத்தை மீண்டும் தோண்டி எடுப்பதற்கும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட் படுத்துவதற்கும் நீதிமன்றத்தின் அனு மதியைக் கோரினர்.

இதற்கான அனுமதியை நீதிமன் றம் வழங்கியதையடுத்து, புத்தளம் நீதவான் அசேல டி சில்வா முன்னி லையில் சடலம் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

மிகவும் இரகசியமான முறையில் குறித்த நபரின் இறுதிக்கிரியையில் பங் கேற்ற 9 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர் என்று பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

மனைவியும் மகளும் கொரோனாத் தொற்றால் மரணம்



## தொற்றால் உயிரிழந்தவர்களின்

# இறுதிக்கிரியை செலவுகளை தியாகி அறக்கொடை ஏற்கிறது



யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டத்தில் தொற்றால் உயிரிழந்தவர் களின் இறுதிக்கிரியை களுக்கான செலவை தியாகி அறக்கொடை நிறுவனம் பொறுப்பேற்கிறது. உயிரிழந்தவரின் குடும்பத்தினரின் பொருளாதார நிலையை கவனத்தில்கொண்டு இதற்கான நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் ஒருங்கி ணைப்பாளர் க. கருணாகரன் அனுப்பி வைத்த செய் திக் குறிப்பில்,

"அண்மைக்காலமாக உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கத்தால் எதிர்பாரத உயிரிழப்புக்களை எதிர்கொண்டிருக்கும் எமது உறவுகளின் துயரில் நாமும் பங்குகொள்ளும் விதத்தில் அவர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு ஏற்பட்ட அசாதாரண செலவு களை தியாகி அறக்கொடை நிறுவனம் பொறுப் பேற்கும்.

தொற்றால் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மருத்துவமனை நிர்வாகத்தை தொடர்பு கொள்ளும் பட்சத்தில், இறுதிக் கிரியைகளுக்கான செலவுகளை மருத்துவமனை நிர்வாகம் ஊடாக தியாகி அறக் கொடை நிறுவனம் பொறுப்பேற்கும். இன்று முதல் இந்த உதவித் திட்டம் நடைமுறைக்கு வருகின்றது என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ -5)

# ஆயுர்வேத வைத்தியசாலை கட்டில்களில் 48 சதவீதம் தொற்றாளர்களுக்கு சிகிச்சை

கொழும்பு, செப். 11

ஆயுர்வேத வைத்தியசாலை கட்டமைப் பிலுள்ள கட்டில்களில் நூற்றுக்கு 48 சத வீதத்தை கொரோனா வைரஸ் தொற்றா ளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்கு வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆயுர் வேதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயர்வேத வைத்தியசாலை கட்ட மைப்பில் 5 ஆயிரம் கட்டில்கள் காணப் படுகின்றன.

இதற்கமைவாக ஆயுர்வேத வைத்திய சாலைகளின் கட்டில்களில் ஒரு தொகு தியை கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக ஆயுர்வேத ஆணை யாளர் வைத்தியர் தம்மிக்க அபேகுணவர் தன ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட நடவடிக்கையாக பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை உள்ளிட்ட 16 வைத்தியசாலை கட்டமைப்பில் உள்ள 1300 கட்டில்கள் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற் குத் தயார் நிலையில் இருக்கின்றன என வும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- திரைப்படம்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை - தமிழர்தரப்பில ஜெனீவாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட அறிக்கைகள் அனுப்புவது



**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம் -மசாற்ற மாநகரம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு